திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9   9—12—55   :   வெள்ளி   :   விலை 3 அணு   மலர் : 17

நேரு மன்றத்தில் கோரம்!

நேரு பண்டிதர் தர்பார் நடத்தி வருகின்ற கொலு மண்டபமான மக்கள் சபையில் கடந்த சில நாட்களாக "கோரம்" இல்லாத குறை சபைத் தலைவர் முதல் சர்க்கார் கட்சித் தலைவர் வரை குடைந்திருக்கிறது. "லோக்சபா" என்று அவர்கள் கூறி வருகின்ற அந்த மக்கள் பிரதிநிதிகள் சபையில் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி விவாதிக்கும் போது "கோரம்" குறைந்து காணப்படுகிறது.

ஒரு நாட்டின் பாராளுமன்றம் மிக முக்கியமான அமைப்பாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் — ஆட்சியில் அமர்ந்திருப்போரின் நிர்வாகத்தைப் பற்றியும்—தங்கள் தங்கள் தொகுதி மக்களின் குறைகளை எடுத்துக் கூறி நிவாரணம் கேட்டும்—பல முக்கிய பிரச்னைகளை அலசி ஆராய்ந்தும், நாட்டு நிலைமையை ஒழுங்கு படுத்தியும் வரும் ஒரு ஒப்பற்ற சபை—இதுதான் ஜன நாயகம் வளர்ந்துள்ள நாடுகளில் நாம் காணுவது. அப்படிப்பட்ட ஒரு சபையில் ஏதாவதொரு வேளைகளில், போதுமான உறுப்பினர்கள் சபைக்கு வராமல் போனால் "கோரம்" (Guorum) குறையும்.

ஆனால் 'அடிக்கடி—வேளைக்கு வேளை "கோரம்" அற்ற குறை நம் நாட்டு மக்கள்சபையில் குறுக்கிடுகின்றது!

அவைத்துணைத்தலைவர் அனந்த சயனம் அவர்கள் "நான் என்ன பள்ளி ஆசிரியனா, எந்த உறுப்பினர் சபைக்கு வந்தார் வரவில்லை என பேரேடு குறிப்பதற்கு" என்று கேட்டு, "இனியும் இந்நிலை நீடித்தால் ஒரு நாளைக்கு சபையைத் தள்ளி வைப்பேன்" என்வும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்படி கோரமற்ற குறையை டில்லியிலுள்ள மக்கள் சபையில் அடிக்கடி தோழர் எச். வி. காமத் சுட்டிக் காட்டவும், உடனே சபாநாயகர் "கோரம் மணி"யை அடிக்க உத்திரவிடவும்—வெளியில் இருக்கின்ற உறுப்பினர்கள் முண்டியடித்துக்கொண்டுபலவித வழிகளின் உள்ளே நுழையவுமான நிலைதான் நமக்கு வியப்பளிக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளு மன்றத்திற்கு வந்திருக்கின்றனர். ஆனால் அடிக்கடி எழுந்து வெளியே சென்று விடுகின்றனர். உடனே "கோரம்" குறைகிறது! இப்படி உறுப்பினர்கள் அடிக்கடி வெளியே செல்வதில் பெரும்பாலானோர் "காங்கிரஸ் உறுப்பினர்கள்" என்பதை நேரு பண்டிதரின் அறிக்கையே சுட்டிக் காட்டுகிறது.

நேரு பண்டிதர் அவர்கள் "கோரம்" குறைந்த பின்னர் அறிக்கை விடுவதுபற்றி நமக்கு அக்கறையில்லை, ஆனால் சபையில் "கோரம்" குறைவதற்கு நேருவும் ஒரு காரணம்!

பண்டித நேரு அவர்கள்டில்லிப் பாராளு மன்றத்தின் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் தலைவர்-! அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை, தன் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலாகிலும் சரி, அல்லது பாராளுமன்றக் கூட்டத்திலாகிலும் சரி, அவர்களை தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறி விவாதிக்க அனுமதிப்பது கிடையாது!

டில்லி சட்ட சபையில் எந்த தீர்மானமாயினும் சரி, காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும், நேரு என்னசொல்லுகிறாரோ அப்படித்தான் தங்கள் முடிவையும் கூற வேண்டும்!

நேரு "இந்தத் தீர்மானம் மிக மிக நல்லது! இதை ஆதரித்து ஓட்டளியுங்கள் காங்கிரஸ்காரர்களே" என்றால் காங்கிரஸ் உறுப்பினர்கள் கட்டாயமாக—ஆதரித்தாகவேண்டும்!

நேரு "இந்தத் தீர்மானம் தீது பயக்கும். என்னருமைக் காங்கிரஸ் உறுப்பினர்களே நீங்கள் இதற்கு ஆதரவாக ஓட்டளிக்காதீர்" என்றால் எல்லா காங்கிரஸ் மெம்பர்களும் அத் தீர்மானத்துக்கு ஆதரவாக ஓட்டளிக்கக் கூடாது!

நக்கீரன்

நேரு "கையைத் தூக்குங்கள்" என்றால் கையைத் தூக்கவேண்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிடத்துக்கு வருகைதந்த சோவியத் தலைவர்களுக்கு திருக்குறள் அன்பளிப்பு

தென்னாட்டுக்கு வருகை தந்த ருஷ்ய நாட்டுத் தலைவர்களுக்கு ஆம்பூர் திருவள்ளுவர் கழகத்தார் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய திருக்குறளை (டெல்லியிலுள்ள ரஷ்யத்தூதுவர் மூலம்) அனுப்பிவைத்தனர், ரஷ்யத் தலைவர்கள் தாயகம் திரும்புகையில் திருக்குறளை அவர்களிடம் டெல்லியிலுள்ள ரஷ்யத் தூதுவர் மூலம் சேர்க்கப்படும்.

பஞ்சாப் கட்டுரை

நான் கண்ட சந்த்ராம்

ஜாட் - பாட் - தோடக் மண்டல் (4)

டாக்டர் பி ஆர், அம்பேத்கார் சந்த்ராமின் அத்யந்த நண்பர்.

'பிறக்கும்போது இந்துவாகப் பிறந்தாலும், இறக்கும் போது இந்துவாக இறக்க விருப்பப்பட மாட்டேன்'—என்று கூறுபவர் அம்பேத்கார். அண்மையில் நடக்க இருக்கும் 2500-வது புத்தர் பிறந்த நாள் விழாவின் போது பௌத்த மதத்தைத் தழுவப் போகிறார் என்பதனையும் அறிவோம். அதுபோது இந்துமதம் அவருக்கு எப்படிப் பட்ட வைரி என்பதும் புலனாகிறது, நிற்க,

அத்தகு அம்பேத்காரின், அறிவைத் தொட்டுப் பார்ப்பதைக் காட்டிலும், அவரது உள்ளத்தைக் கவர்வதிலே நாட்டங் காட்டினார் சந்த்ராம். ஆகவே அவரை அணுகி தம் கழகத்தைப்பற்றிக் கூறி, ஜாட்-பாட்-தோடக் மண்டலத்தின் ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்கும்படி ஏற்பாடு செய்தார். அது 1936-ல்

ஆனால் அம்பேத்கார் தலைமை வகிப்பதை பலர் விரும்பவே யில்லை. அவரைக் கருங்கொடி காட்டித்தான் விரட்டுவோம் என எச்சரிக்கை விடுத்தனர் பலர்.

பெருந்தகையாம் அம்பேத்காருக்கு எவ்வகைச் சிறுமையும் தம்மால் நிகழக் கூடாதென்று கருதி, அன்னாரிடம் தலைமைப் பிரசங்கத்தை எழுதி வாங்கி, ஆண்டு விழாவில் படிக்க முயன்றார் சந்த்ராம்—படித்தார். எதிர்ப்புகள் எழுந்தன. இடி இடித்தது. புயல் வீசியது. இந்துமதத்தை அவ்வளவு கடுமையாகத் தாக்கத் தேவையில்லை. சாதிக் கட்டுப்பாட்டைச் சாடுவதோடு நின்றிருக்கலாம், இந்து மதத்தை விட்டு வெளியேறி வேறு மதம்தழுவுவதா? முடியாது! கூடாது! விடோம்!—எனக் கூக்குரலிட்டனர் பலர். போட்டிச் சனாதனிச் சங்கங்களும் உறுமின. பத்திரிகைகள் கனல்தெறிக்க வசைபாடின. உருட்டல், மிரட்டல் உருவெடுத்தன. ஒரு வகையில் முடிந்தது கூட்டம்.

இத்தகைய எதிர்ப்பு தோன்றியதாயின் டாக்டர். அம்பேத்காரின் பிரசங்க உரை எத்தகு அழுத்தம் வாய்ந்தது என்பதை அளந்துணர்ந்து விடலாம்.

அப்பிரசங்க உரை ஓர் ஆராய்ச்சி நூல் எனத் திகழ்ந்தது. "சாதியை ஒழித்துக் கட்டுங்கள் ! ஏன்" — "Annihilate Caste System! Why!" என்னுந் தலைப்பை ஏற்றது. நூற் பிரதிகள் குவிந்தன. பஞ்சாபி, மராத்தி, தமிழ், குஜராத்தி, மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் பெயர்த்து எழுதப்பட்டு, இந்தியாவின் நாலு பக்கங்களிலும் உணர்ச்சி எழுப்பின. டாக்டர். அம்பேத்காரின் புகழும், சந்த்ராம் ஜாட்—பாட்—தோடக் மண்டலின் புகழும் இமயமென ஓங்கியது.

இச்சம்பவத்தைப் பற்றிய விரிவான விளக்கங்கள் தோழர் தனஞ்ஜெயகீர் என்பவர் எழுதிய 'Dr. Ambedkar—Life and Mission, என்னும் நூலிலும் "இந்து மதம்—ஓர் தீர்ப்பு" ('Verdict on Hinduism')—என்ற பகுதியில்—பக்கம் 257-274—காணக்கிடக்கின்றன. விளக்கம் வேண்டுவோர் ஆங்கே கண்டு கொள்க.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அம்பேத்கார் வெள்ளையர் ஆட்சியில் பொறுப்பானதொரு பதவி ஏற்றிருந்த போது, லாகூருக்கு அரசியல் சம்பந்தமாக வந்திருந்தார். அப்போது ஜாட்—பாட்—தோடக் மண்டல் சார்பாக சந்த்ராம், அன்னாருக்கு ஓர் தேநீர் விருந்தளித்தார். விசேஷ அழைப்பின் பேரில், சில சாதி இந்து பெரும் புள்ளிகளும் பங்கு கொண்டனர். அவர்களில் ஒருவர் அம்பேத்காரை நோக்கி, "ஐயா, மதம் மாறப் போவதாகக் கொண்டுள்ள எண்ணத்தை எவ்வகையிலாவது விட்டொழிக்க மாட்டீர்களா? — என்று கேட்டார். அதற்கு அம்பேத்கார் "ஜாத் — பாத்— தோடக் மண்டல் கூறிவருகிற சாதி ஒழிப்பு நிபந்தனைகளையும், கருத்துக்களையும், சாதி இந்துக்களாகிய நீங்கள் எப்போது மனப்பூர்மாக ஏற்றுக் கொள்கிறீர்களோ அப்போதுதான் எனது மத மாற்ற எண்ணத்தை அகற்றுவேன்"—எனப் பதிலிறுத்தார். "ஆண்டு நூறு கழிந்தாலும் உங்களது மதப்பித்து அகலாதே என்செய்வது?" -என்று தொடர்ந்து இடித்துரைத்தார். அதுபோது பக்கமிருந்த பத்ரிதாஸ் என்பார். டாக்டர் ஐயா! 100 என்பதிலுள்ள கடைசி சுன்னத்தை நீக்கி விடுங்கள்; இன்னும் 10 ஆண்டிலே சாதிச் செருக்கு சரிந்தே போய் விடும்" என்று கூறினார்.. "1000 ஆண்டானாலும் இந்தியாவினின்று சாதிப்பிணி ஒழிவதாகப் புலப்படவில்லை" — என்று கூறி விடைபெற்றாராம் அம்பேத்கார்.

சந்த்ராமும் - காந்தியாரும் !

"சாதி முறை ஏற்பாடு ஒரு நல்ல ஏற்பாடாகும். இம்முறையால் உத்தியோக வேட்டையில் வெறி பிடித்தலையாமல், அவனவன் சாதித் தொழிலை அவனவன் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், அமைதியும் ஐக்யமும், நிலவ வழிவகை இருக்கிறது"—எனக் காந்தியார் வேதாந்தம் பேசிய காலம் ஒன்றிருந்தது.

அவ்வேளை, சந்த்ராம் பல நண்பர்களுடன் சேர்ந்து, ஜாட்-பாட்-தோடக் மண்டலின் சார்பில், காந்தியாரை லாகூரில் வைத்து பேட்டி கண்டார்,

சந்த்ராம் காந்தியாரைக் கேட்டார் : "அவனவன் சாதித் தொழிலை அவனவன் செய்ய வேண்டுமென்ற நியதி பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசிரியர் ஆகிய மூன்று சாதியினருக்கும் அனுகூலமாக இருக்கலாம் ; ஆனால் மலம் எடுக்கும் தோட்டி என்றென்றைக்கும் பரம்பரை பரம்பரையாக மலம் எடுத்துக் கொண்டேதான் இருக்க வேண்டுமென்ற நியதி நியாயந்தானா ?

"மகாத்மா ஜீ! தாங்கள் இந்துமத சாதி முறைப்படி பனியா வகுப்பைச் சார்ந்த வைசியர், தங்களது சாதித் தொழில் உப்பு, எண்ணெய், மாவு, முதலிய பண்டங்கள் விற்பது! அதை விடுத்து, ஏன் அரசியல் அகராதி படிக்க முன் வந்தீர்கள்?"—என்று சாதுர்யமாகக் கேட்டார் சந்த்ராம்.

இதைப் பக்கமிருந்து கேட்ட அன்னை கஸ்தூரி பாயும், சேட் லால் பஜாஜூம் விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.

காந்தியார் பதில் கூறப் புகுந்தார் : "சந்த்ராம் ஜீ ! நான் தற்போது உங்கள் கொள்கைகளைத்தானே, நேரிடையாக இல்லாவிடினும், மறைமுகமாவது பிரசாரம் செய்து வருகிறேன். தீண்டாமை ஒழிய வேண்டும்! இந்து முஸ்லிம் ஒற்றுமை நிலவ வேண்டும்!—என்ற கொள்கைகளை நடைமுறையில் அனுசரிக்க முயற்சித்து வருகிறேன். ஆனால் நேரிடையாக "சாதிகள் இல்லையடி பாப்பா, குழலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாபம்—" என்று குழந்தைகளுக்குக் கூட கூறமுடியாத நிலையில் உள்ளேன்" என்பதாக ஒப்புக் கொண்டாராம் காந்தியார்.

"சாதிகள் அடியோடு ஒழிந்தே தீர வேண்டுமென்று கூற ஏன் தயங்குகிறீர்கள்"—என்று சந்த்ராம் இடைமறித்துக் கேட்டார்.

"அதற்குக் காரணத்தையும் தாங்களே தான் கூறுங்களேன்" என்று வேடிக்கையாகக் கேட்டாராம் காந்தியார்.

சட்டென்று சந்த்ராம் 'அப்படிப்பேசத் தொடங்கி விட்டீர்களானால் பிர்லா, பஜாஜ் பனியா, பண மூட்டைகள் இடமிருந்து ஒரு செப்பாலடித்த காசுங் கிட்டாது" எனப் பதிலிறுத்தாராம்.

'கொல்' என்ற சிரிப்பொலி கூடத்தை எதிரொலித்தது.

முடிவாக காந்தியார், தாம் இன்னும் ஐம்பது ஆண்டுகள் உயிரோடு இருப்பேனாகில், சாதி ஒழிப்புப் பிரசாரத்தில் நேரிடையாகக் குதிப்பதாகவும் உறுதியளித்தாராம்.

ஆரிய சமாஜத் தொடர்பு !

ஆரிய சமாஜம் 1875-ல் காணப்பட்டது. அதைக் கண்டவர் தயானந்த சரஸ்வதி. அது ஒரு சீர்திருத்த அமைப்புதான். ஆனால் அதுபழைய வேதத்தையே பிரமாணமாகக் கொண்டது. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாதது. உருவ வழிபாட்டையும் ஏலாதது. ஆனால் இந்து மதம் அசைவு குலையக் கூடாது என்ற நோக்க முடையது. அது அளித்த தேச பக்தரே லாலா லஜபதி ராய்,

ஆரிய சமாஜத்தின் சிற்சில கொள்கைகள் சந்த்ராம் நோக்குவதற்கு உகந்ததாய் இருந்ததால், அவர் ஒரு காலத்தில் அந்த சமாஜத்தோடு தொடர்பு கொண்டார். அத்தொடர்பு வளரவில்லை தேய்ந்தே போயிற்று, சந்த்ராமின் வேங்கைப் பாய்ச்சல் சாதி ஒழிப்பு வேகம், சமாஜத்தின் ஆமை அசைவிற்கு ஒத்துவரவில்லை விலகினார். வீறிட்டார். வெற்றி வாகை சூடினார்.

ஜனக் கணக்கெடுப்பில் சாதியில்லை !

1941-ம் ஆண்டு ஜனத் தொகை கணக்கெடுக்கப்பட்டது. சந்த்ராம், ஜாட்-பாட்-தோடக் மண்டலின் சார்பாக இடைவிடா முயற்சி எடுத்து, அரும்பாடு பட்டு, அரசாங்கத்தாரிடமிருந்து, ஜனத் தொகை கணக்கெடுப்பின் போது அவரவர் சாதிகளைக் கூறாமல் இருக்க விருப்பப்படுபவர்களை அவ்வாறே நடந்து கொள்ளும்படி அரசாங்க பூர்வமாக அங்கீகாரம் பெற்றார்.

அவ்வாறே ஏழு இலட்ச மக்களை சாதியில்லை என்று பதிவு செய்து கொள்ளச் செய்த பெருமை சந்த்ராமிற்கு என்றென்றைக்கு முண்டு.

கிளை !

ஜாட்—பாட்—தோடக் மண்டலின் கிளை யொன்று பூனாவிலும் இயங்கி வந்தது.

இந்து முஸ்லிம் ஒற்றுமை !

"இந்துச் சாயா, முஸ்லிம் சாயா" என்று உணவுப் பொருள் வியாபாரத்தில் கூட மதவெறி புகுந்து கோரத்தாண்டவம் ஆடிய காலத்திலும் சமாதானத்துக்காகவும், ஒற்றுமைக்காகவும் சமர்புரிந்த தியாகி சந்த்ராம்.

அதன் விவரங்களை அடுத்த கட்டுரையில் காண்போம். ஜனாப், ஜின்னா சந்திப்பும் அதில் அடங்கும்.

—திருவேடம்.

★

கொள்கையற்ற கம்யூனிஸ்டுகள்!

இரு கொடி ஏந்திகளின் அரசியல் சூன்யம்!

"நேரு, என்று ரஷ்யாவுக்கு புறப்பட எண்ணினாரோ, அன்றே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சரிவு காலம் தொடங்கி விட்டது" என்று ஒரு நண்பர் எனக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், குறிப்பிட்டுள்ளார். அது எத்தனை தூரம் உண்மையானது என்பதை அண்மையில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் மெய்ப்பித்து விட்டது.

ரஷ்யாவுக்கு நேரு சென்றார்; நேருவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது "ஆகா! எங்கள் சோவியத் யூனியன், இந்தியப் பிரதமருக்கு அளித்துள்ள சிறப்பைக் காணீர்! இந்திய மக்கள் பால் ரஷ்யருக்குள்ள அன்பைப் பாரீர்! என்றெல்லாம் பிரசாரம் செய்தனர்! இங்குள்ள கம்யூனிஸ்டுகள் ரஷ்யப் பிரதமர் புல்கானினும், குருசேவும் இந்தியாவுக்கு வருகிறார்கள் என்ற செய்தி வெளியானதும், இந்தியக் கம்யூனிஸ்டுகளின் உள்ளத்திலே மகிழ்ச்சி ஊற்றெடுத்தது.

புல்கானின் வருவார்; இந்தியாவில் கம்யூனிஸ்டு கட்சியின் நிலைமையை ஆராய்வார். சரிந்து வரும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு புல்கானின் உயிர் கொடுப்பார். அதை வைத்து 'கம்யூனிசத்தை அகில இந்தியாவிலும் ஆழ வேரூன்றி விடலாம் என்றெல்லாம் பகல் கனவு கண்டனர்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி, புல்கானினும், குருசேவும் இருக்கவில்லை. இவர்கள் எவரை தென்றலென நினைத்தார்களோ, அவர்கள் புயலாக இருந்தனர். அதுமட்டுமல்ல, எவரது உதவியால் கம்யூனிஸ்ட் கட்சி உயிர்பெறும் என்று எண்ணினார்களோ, அவர்களே இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சவக்குழி பறித்து விட்டார்கள்!

கம்ப ராமாயணத்திலே மார்க்சீசம் தேடிக் கொண்டிருக்கும் தென்னாட்டு கம்யூனிஸ்டுகள், வட இந்திய கம்யூனிஸ்டுகள் இருவருக்கும்; புல்கானின், குருசேவ் இருவரது பேச்சு பெரிதும் ஏமாற்றமாகத்தான் இருந்திருக்கும்!

வீழ்ந்துபோன இந்திய கம்யூனிசத்திற்கு ஊன்றுகோலாக உதவும் ரஷ்யத் தலைவர்களது பேச்சு என்று எண்ணிக் கொண்டிருந்த அவர்களது எண்ணத்திலே மண்ணை வாரிப் போட்டு விட்டனர் சோவியத் தலைவர்கள்.

இந்திய கம்யூனிஸ்டுகள், இந்திய சர்க்காரை குறை கூறினர். சர்க்காரது திட்டங்களை எதிர்த்தனர். காங்கிரஸ் சர்க்காரை கவிழ்ப்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். "ரஷ்யாவைப் பார்! அங்கு நடக்கும் ஆட்சியின் மாட்சியைப் பார்!" என்று கூறித்திரிவதையே தொழிலாகக் கொண்டனர்.

ஆனால் வந்த தலைவர்களோ, இந்திய சர்க்காரைப் புகழ்ந்தனர்! இங்குள்ள கம்யூனிஸ்டுகளால், எந்தத் திட்டங்கள் மோசமென்று குறை கூறப்பட்டதோ, அந்த திட்டங்களைப் போற்றினர், அத்துடன், "எந்த ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்திலும் நாங்கள் தலையிட மாட்டோம்" என்ற பீடிகையுடன் தங்கள் உரையைத் தொடங்கினர். "இவர் ஒரு கம்யூனிஸ்ட்" என்று அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு கம்யூனிஸ்ட் எம். எல். ஏ. வைப் பார்த்து, 'இவரது அரசியலைப்பற்றி எனக்கு அக்கரையில்லை' என்று கூறிவிட்டனர்.

இதையெல்லாம் எண்ணும்போது, நிச்சயம் புண்ணாகத்தான் செய்யும் இந்நாட்டு கம்யூனிஸ்டுகளின் இதயம்! அடுத்த பொதுத்தேர்தலில் அவர்கள் எதைச் சொல்லி மக்களிடம் ஓட்டுக் கேட்பார்கள்?

இந்திய சர்க்காரது எந்த திட்டங்களையும் நடவடிக்கைகளையும் குறை கூறமுடியாதே கம்யூனிஸ்டுகளால்! தப்பித் தவறி அரசாங்கத்தைப்பற்றி ஏதாவது குறை சொல்லி, ஓட்டுக் கேட்டாலும், "பொதுவுடைமைப் பூங்கா" என்று உங்களால் வர்ணிக்கப்பட்ட ரஷ்ய நாட்டின் பிரதானத் தலைவர்களே இந்திய சர்க்காரின் திறமைகளை போற்றிப் புகழ்ந் திருக்கும்போது, நீ குறை கூறுகிறாயே, நம்பத் தகுந்கதுதானா!" என்று பொதுமக்கள் எதிர்க் கேள்வி எழுப்புவார்கள் நிச்சயமாக! இதை எண்ணும்போது தூண்டிற் புழுவென துடிக்கும் கம்யூனிஸ்டுகளின் நெஞ்சம்! புல்கானின், குருசேவ் இந்தியாவுக்கு வராமலே இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம்கூட எழும் அவர்களது உள்ளத்தில்!

கோவை நகருக்கு புல்கானின் வரும்போது, தென்னக கம்யூனிஸ்டுகள் பலர் எந்த இந்திய அரசாங்கத்தை தூற்றித் திரிந்தார்களோ, அந்த அரசாங்கத்தின் கொடிகளைத் தூக்கிக் கொண்டு திரிந்த காட்சியை என்னென்று சொல்வது! "வாழ்க இந்திய அரசாங்கம்! வாழ்க ரஷ்யா! பாரத— ரஷ்யா உறவு நீடூழிகாலம் வாழ்க! என்று "அவர்கள் எழுப்பிய கூக்குரல் இன்னும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வட இந்திய கம்யூனிஸ்டுகளைவிட, தென்னக — அதிலும் குறிப்பாக தமிழக கம்யூனிஸ்டுகளின் நிலைமை— மிக மிகப் பரிதாபத்துக்குரியது ஆகும். ஏனெனில் தேவிகுளம், பீர்மேடு பிரச்னைகளில் அவர்கள் தமிழர்களை வஞ்சித்து, நடுநிலை வகித்து தமிழர்களுக்கு மாபெரும் துரோகமிழைத்து விட்டனர் கொள்கையற்ற இக்கும்பலின் எதிர்காலம் எப்படி அடையும் என்பது பொறுத்திருந்து காணவேண்டிய விஷயமாகும்,

குறிப்பாகச் சொல்லப் போனால், தமிழநாடு கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமைப் பீடமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கட்டுப்பாடு ஒழுங்கு வீதி, சிறிதுமற்றவை, இவ்வுண்மையை அதனை உற்று நோக்கும் எவரும் உணர்வர். ஒரு கொள்கை, திட்டமற்ற அவர்களிடையே நாம் நீதியையும் நேர்மையையும் எதிர்பார்க்கமுடியாது. இவர்களை பொதுவுடைமை 'லேபிலில்' உலவும் சுயநலக்கும்பல் என்று வேண்டுமானால் கூறலாம்!

—கோவை. க. இரத்தினம்

திராவிடன் சந்தா விவரம்

உள்நாடு.

ஆண்டு சந்தா	...	ரூ.	8	0	0
ஆறுமாதம்	...	ரூ.	4	0	0
தனிப்பிரதி	...	ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா	...	ரூ.	9	0	0
ஆறு மாதம்	...	ரூ.	4	8	0
தனிப்பிரதி	...	ரூ.	0	3	6

குறிப்பு : இலங்கை, மலேயா போன்ற வெளிநாட்டுத் தோழர்கள், பிரிட்டிஷ் போஸ்டல்ஆர்டர் (B.P O.) வாங்கி அனுப்பவேண்டுகிறோம்.

திரு. வி. க. தரும் அமுது!

தொண்டர் பத்திரிகை யுலகைப் பொருட்படுத்தலாகாது. பத்திரிகை விளம்பரங்கள் கருதுவோர் சிறந்த தொண்டராதல் அரிது; சிறந்த சீர்திருத்தக்காரராதலும் அரிது.

ஃ

பெண்மணிக்கு இழிவு நேருமாயின் அதைப் போக்க ஆண் மகன் விரைதல் வேண்டும்; இல்லையேல் அவன் ஆண் பிறவி எய்தியவனாகான்.

ஃ

ஒரே குடும்பத்தில் ஒருவர் ஹிந்துவாகவும், இன்னொருவர் ஜைனராகவும்,மற்றொருவர்புத்தராகவும், வேறொருவர் கிருஸ்துவராகவும், பிறிதொருவர் இஸ்லாமியராகவும் இருக்கும் முறையில் உலகம் சீர்திருத்தம் எய்தல் வேண்டுமென்றும், மத மாறாமலே ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரை மணக்கும் உரிமை இருத்தல் வேண்டும் என்றும், அப்பொழுதே உரிமை உணர்வும், சமயப் பொறையும் வளருமென்றும், மத வெறியும், மதவாதமும் இடம்பெறா தொழியுமென்றும் யான் எண்ணுகிறேன்; பேசுகிறேன்; எழுதுகிறேன். இச் சீர்திருத்தத்துக்கும் கலப்பு மணம் தேவை,

ஃ

கைம்மை மண வாயிலாகவும் சாதி மத வேற்றுமைகளைக் களைந்து சன்மார்க்கத்தை வளர்க்கலாம்.

ஃ

பெரியோர் உருவ வழிபாட்டைப் பார்க்கினும் அவர்தம் அறிவுறுத்தலே வாழ்க்கையைச் சீர்செய்ய வல்ல தென்பதை மக்கள் உணர்ந்து நடத்தல் வேண்டும்...பெரியோரின் போதனை வழி நின்றொழுகுவது அவரை வழிபடுவதாகும்.

ஃ

கலப்பு மணஞ் செய்வோர் எவராயினும் அவர் ஒரு பெருந் தேச சேவை செய்தவரென்பது என் கருத்து.

[திரட்டு : டபிள் யூ]

★ பெருமை யுண்டோ? ★

"இளங்கோ"

மண்ணுலகில் முதன்மொழியாய் இருந்தால் என்ன ?
மட்டில்லாப் பெருமைபல கொண்டா லென்ன ?
பண்ணுடைய பாக்கள்பல இருந்தால் என்ன?
பகைவரையும் தன்வயமாய் ஆக்கி யென்ன?
பாண்டியர்தான் தமிழ்மொழியை வளர்த்து என்ன ?
பாப் புனையும் புலவர்பலர் இருந்து மென்ன ?
எண்ணில்லா இலக்கியங்கள் இருந்து மென்ன?
இளமையொடு அழகெல்லாம் பொருந்தி யென்ன ?

திருக்குறள்தான் தமிழ்மொழியில் தோன்றி யென்ன ?
தேவாரம் திருவாசகம் இருந்து மென்ன ?
அருமைமிகு சிலப்பினோடு மணிமே கலையும்,
அளவில்லா அருமையான சங்க நூல்கள்:
பெருமைமிகு புலவர்கள் நூலும் மற்றும்
பேராசான் சுந்தரனின் மனோன் மணியம்;
கருத்தான கவிதைகள் புனைந்து தந்த,
கவிமணிபா ரதிதாசன் இருந்து மென்ன?

கட்டழகும் கவின்மொழியும் முல்லைப் பல்லும்.
காதல்மொழி பேசுங்கரு நீலக் கண்ணும்,
பட்டுப்பூ உடையுடுத்த பாவை நல்லாள்
பாங்குடைய தன்கணவன் இல்லம் நீத்துச்
செட்டாகத் தாய்வீட்டில் இருந்து வந்தால்
சீருண்டோ? தமிழ்மொழியும் அதனைப் போலச்
சட்டமன்றம் கோவிலிலே முழங்கி டாமல்
சகல புகழ் பெற்றதனால் பெருமை யுண்டோ?

அந்த நாளில்

அந்த நாளில் தமிழன் உலக நாடுகளனைத்திலும் கப்பல் மூலமாகச்சென்று வாணிபம் செய்தனர்: உலகத்திற்கே நாகரீகத்தை கற்றுத்தந்தனர் என்பதை எண்ணும்போது எவ்வளவு மகிழ்ச்சி? இன்னும் விஞ்ஞானத்தையும் வளர்த்து தன்னுடைமையாக்கிக் கொண்டிருந்தான் என்று அறிந்தால்......! ஆம், அந்த நாளிலேயே 1800-ஆண்டுகளுக்கு முன்னமேயே விஞ்ஞானத்தை தன்னுடைமையாக்கி யிருந்தான் என்றால் ஆச்சரியம்தான் வரும்!

சுமார் 1800-ஆண்டுகளுக்குமுன் தமிழர் விஞ்ஞான முறைப்படி வெண்ணீரை சூடாகவே காத்துவைக்கும் பாத்திரத்தைகண்டு பிடித்து உபயோகித்து வந்திருக்கின்றனர் என்பதை குறுந்தொகைப் பாடல் ஒன்று செப்புகின்றது. (THERMAL FLASKS) வெண்ணீரைத் தாங்கும் குப்பிகள் அந்த நாளிலே இருந்தது. என்பதற்கு ஓரிற் பிச்சையார் பாடிய பாடல்:

"அச்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்ச்
சேமச் செப்பிற் இயரோ நீயே"

—தங்க மாணிக்கம்

கற்பனைச் சிறு கதை

ஞாயிற்றுக்கிழமை

அழகுப்பட்டி: சிறுகிராமம், பெயர் தான் அப்படியேயன்றி அங்கு எழில் தேக்கிய சோலைகளோ, வாவிகளோ, வயல்களோ கிடையாது. வரண்டபூமி என்றும் சொல்வதற்கில்லை இப்படி சொன்னால் அங்கு பிறந்த மண்ணை தங்கள் இரு கண் என மதிக்கும் மக்களுக்கு கோபம்வரும். ஒரு சிற்றாறு ஓடுகிறது. அதுவும் உப்பு நீர். ஒரு சிறு கண்மாய் உண்டு மழைக் காலத்தில் மட்டும் நீர் நிரம்பியிருக்கும். அதனையொட்டி அந்த நீரை நம்பி ஒரு காய்கறித்தோட்டம். ஊரைச் சுற்றிலும் பருத்தி கம்பு, சோளம் விளையும் கரிசல் காடு. இவைகள்தான் அந்த ஊரிலே காணக் கிடைக்கும் இயற்கைக் காட்சிகள்.

அங்கு வாழுகின்ற பெரும்பான்மையான மக்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்கள். கண்ணை மூடிக்கொண்டு மூடக்கருத்துகளை நம்புவர்கள். அங்கு எந்தப் பகுத்தறிவு வாதியையும் மனிதனாக மதிக்கமாட்டார்கள். பைத்தியக்காரன்என்றே கருதுவார்கள். அங்குள்ளவர்கள் அனேகர் கடல் கடந்த நாட்டிலே சென்றுழைத்து மனைவி, மக்களையும் வாழ்க்கையையும் காப்பாற்ற வேண்டியவர்கள், அங்கு ஞாயிற்றுக்கிழமை யென்றால் விழாக் காலம்போல கலகலப்பாக இருக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; கிழக்கு வானத்தின் அடியிலிருந்து செங்கதிரொளி பரப்பி ஞாயிறு புறப்பட ஆரம்பித்தது. மாதாகோயிலின் மணி 'டாண் டாண்' என ஒலி எழுப்பிக்கொண்டிருந்தது. அந்த சிங்காரச் சின்னக் கிராமத்து மக்கள் பரபரப்புடன் எழுந்து வேதக் கடன்களை முடிக்கத் தயாராயினர்.

ஆறு நாட்களில் வானத்தையும் வாரிதியையும் படைத்து நிலத்தைப் படைத்து திங்களையும் ஞாயிறையும் படைத்து இயற்கை வளங்கள் அனைத்தையும் படைத்து அதனை அனுபவிக்க ஒருபிடி மண்ணால் ஆதி மனிதனையும் படைத்து அவனுக்குத் துணையாக ஆதி மனுஷியையும் படைத்து ஏழாம் நாளான ஞாயிறு அன்று ஓய்வு எடுத்துக் கொண்டார் என நம்பப்படும் பரலோக பிதாவாகிய சர்வலோக சர்வேசுபரனுக்கு நன்றி செலுத்தும் நன்னாளாக—ஓய்வுத் திருநாளாக அன்றைய தினத்தில் கொண்டாடிப் பிரார்த்தனை செய்ய மக்கள் அணி அணியாக ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

எல்லோருடைய உள்ளத்திலேயும் மகிழ்ச்சி கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் ஆசிரியர் பாலுவின் உள்ளம் மட்டும் வேதனையால் வெந்து கொண்டிருந்தது. அவன் என்ன செய்வான் - பாவம்! அவனோ ஏழை ஆசிரியன், முக்கால் டசன் குழந்தைகளின் சிருஷ்டிகர்த்தா. ஆக்க ஒருவன் காக்க ஒருவன் என்று இலாகா பிரித்துக் கொள்ளும் கடவுள்கள் இல்லை அந்தக் குடும்பத்தைச் செழிக்கச் செய்ய! அவன் செய்துவிட்ட தவறின் விளைவாக அவன்கைகளிலே விலங்கிடும் காட்சியையும் வீதியிலே இழுத்துச் செல்லப்படுகின்ற காட்சியையும் அந்த ஊர்மக்கள் ஏளனமாகச்சிரிக்கும் காட்சியையும் எண்ணிப்பார்த்த அவன், நெஞ்சம் அவமானத்தால் குன்றியபடி குமுறிக்கொண்டிருந்த பாரத்தைத் தணிக்க மாதா கோவிலுக்குச் சென்றாகிலும் பிரார்த்தனை செய்ய நினைத்து நடந்தான்.

அந்த ஊர் மாதா கோவிலின் நிர்வாகியான பாதிரியார் உள்ளத்திலே அடக்க முடியாத ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. அவனைப் பழிவாங்காமல் விடமாட்டேன். ஆறு மாதங்களாகிலும் சிறைக்கம்பிகளுக்குப்பின்னால் தள்ளி வாட்டி வதைத்தால் தான், தணியும் என் ஆத்திரம் என்று அவரது வாய் புலம்பிக்கொண்டிருந்தது பிறரை மன்னியுங்கள் — நீங்கள் மன்னிக்கப் படுவீர்கள்' என்ற உயர்ந்த போதனையெல்லாம் நினைத்துப் பார்க்கவேயில்லை—ஊருக்கு உபதேசியான அந்த ஆண்டவன் பிரதிநிதி.

ஆலயத்தில் மக்கள் நிறைந்து விட்டார்கள். பிரார்த்தனை ஆரம்பித்தது. 'நீங்கள் மக்கள் கண்களில்படும் பொருட்டு ஜெபாலயங்களில் சந்திக் கோடிகளிலும் நின்று கொண்டு ஜெபம் செய்யாதீர்கள் ஏனெனில் அது கள்ள ஞானிகளின் திருட்டு வேடமாக இருக்கிறது' என்று மொழிந்த உலக உத்தமராம் ஏசுவினையும் கடவுளின் திருக்குமாரன் என எண்ணி அறியாமையால் அழுந்திக்கிடந்த மக்கள் மன்றாடிப் பிரார்த்தனை செய்தார்கள்.

மத குருவான பாதிரியாரோ வழக்கம் போல தன்னுடைய பிரசங்கத்தை ஆரம்பித்தார். கொல்லும் ஆயுதங்களையும் கொடுமையான வஞ்சகத்தையும் உடையவர்களாய் காட்டுமிராண்டிகளாய வாழ்ந்த யூத மக்களிடையே அறிவொளி பரப்பும் கதிரவனாகத்தோன்றி மலைப்பிரசங்கங்கள் செய்தார் ஏசுநாதர். நேசியுங்கள் - பிறரை நேசித்தால் பொறாமை என்றே சொல்ல அழிந்துபோகும். ஒருகன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும்திருப்பிக் கொடுங்கள். அதன் விளைவாக எதிரியின் மனம் திருந்தி நல் வழியில் திரும்புவான். தேப்பியழும் மக்களுக்குத் தேற்றரவளியுங்கள். அவதிப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக இருங்கள். உலக முழுமையும் அன்பு அசோச்சுமானால் அதுவே ஆண்டவன்.

பிறருடைய குற்றங்களை மன்னியுங்கள்—மீண்டும் குற்றம் செய்யாமல் தடுத்துவிடலாம் என்றஏசுவையூதர்கள் பிடித்து காரி உமிழ்ந்து கசையடிகள் கொடுத்து முள்ளால் முடிதரித்து வீதியெல்லாம் சிலுவையைச் சுமத்தி இழுத்துச் சித்திரவதைகள் பல புரிந்து செங்குருதியை கொட்டச் செய்து சிலுவையிலே அறைந்து உயிரைப் பிரித்தார்கள். உலகத்து மக்களுக்கு நல் உபதேசங்கள் வழங்கிய உத்தமர் தியாகியாக மடிந்தார். மடியும்போது கூட பகைவரிடம் பகைமை காட்டவில்லை. 'பிதாவே இவர்களை மன்னியுங்கள்' என்று மன்றாடித்தான். மடிந்தார். அந்த ஏசுவின் தியாகத்தையும் உபதேசத்தையும் மனதிற் கொள்ளுங்கள். அவ்வழி நில்லுங்கள்! எனக் கேட்பவர் உருகும்படி பாதிரியார் தன் பிரசங்கத்தைச் செய்து கொண்டிருந்தார்!

கோயிலின் முன் தளத்தில் அமர்ந்திருந்த ஆடவர்கள் பிரசங்கத்திலே கவனம் செலுத்தவில்லை. அவரவர்கள் தங்கள் வாழ்க்கை பிரச்னைகளையும் தொழில் நிலவரங்களையும் பற்றி பேசிக்கொண்டிருந்தனர். கோயிலின் உட்பகுதியில் அமர்ந்திருந்த மகளிர் குலம் மட்டும் சளைத்தது அல்லவே!

ஏண்டி பாருடி அங்கே — அவள் கட்டிக்கொண்டிருக்கிற கல்கத்தா பட்டுப் புடவையை!' என்று ஒரு குரல் மெல்ல எழ, 'ஆமாம் பார்டர் கூட அகலமா அழகாகத்தான் இருக்கு' என மற்றொருத்தி பதில்கூற, வேறொருவள் 'அடியே அவள் போட்டிருக்கிறாளே அந்தக் காசுமாலை ஆறு பவுன்தானும் எவ்வளவு பொலிவா இருக்கிறது. பார்த்தியா' என்று ஒருவளிடம் சுட்டிக்காட்ட 'ஆமாம் வேலைப்பாடு கூட அருமையா அமைஞ்சிருக்கு' என்று விளக்கம் கொடுக்கவுமான காட்சிகளும், வயிற்றைப் பசி கிள்ளித் துடிக்கின்ற பச்சிளங் குழந்தைகள் கதறியழ அதனைக்கொண்டு வந்த தாய்மார்கள் அவஸ்தைப் பட்டுக்கொண்டு குழந்தைகளின் அழுகையை நிறுத்த முயற்சிக்க, குழந்தையின் அழுகுரலை பிடிக்காத சில பிறவிகள் 'ச்சு ச்சு' என தங்கள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு திணறிக் கொண்டிருந்த காட்சிகளும்தான் நடந்து கொண்டிருந்தது.

ஆனால் ஆசிரியர் பாலு, இவை எதிலும் கவனம் செலுத்தவே இல்லையென்றாலும் அவனின் உள்ளத்திலே உற்சாகம் உதித்தது. அகத்தினழகு முகத்திலே என்பதைப்போல தெளிவு மலர்ந்தது மத குருவின் பிரசங்கத்திலே சொல்லிய வாசகங்கள் அவன் காதுகளிலே முழக்கமிட்டபடி இருந்தது.

'பிறருடைய குற்றங்களை மன்னியுங்கள் மீண்டும் குற்றம் செய்யாமலும் தடுத்து விடலாம்' என்ற போதனைகளை எடுத்துச் சொன்ன பாதிரியாரிடம் அணுகி கெஞ்சிக் கேட்டுக்கொண்டு

கீழவைப்பாறு மாறன்

மன்னிப்புக் கேட்டால் நிச்சயம் மன்னிப்பார் என்ற நம்பிக்கை அரும்பிற்று அவனுக்கு. அவன் முகத்திலே சிறிதளவுகூட துன்பரேகை தளிர்க்கவில்லை, இதழோரங்களிலே புன்னகை நெளிய. விட்டு முன்னும் பின்னும் பார்த்தான். கோயில் காலியாக இருந்தது. பிரார்த்தனை முடிந்து அனைவரும் கலைந்து போய்விட்டது தெரிந்தது. எழுந்தான்; நடந்தான். பாதிரியாரின் மாளிகையை அடைந்து வெளியிலே காத்திருந்தான் பாலு, பாதிரியார் வயிறுபுடைக்க உண்டு விட்டு ஒன்றரை அங்குலச் சுற்றளவும் ஆறு அங்குல நீட்டளவுமுள்ள சுருட்டு ஒன்றைப் பிடித்துக்கொண்டு பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்ஸ் புகைபோக்கி குழாய் விடும் புகையைப்போல வாயினால் வெளியில் ஊதித்தள்ளியபடி யானை நடை நடந்து வெளியில் வந்தார்.

'என்னடா நின்று கொண்டிருக்கிறாய்' ஆணவமாய்க் கேட்டார் பாதிரியார். எதிர்பார்த்த அளவுக்கு பாதிரியார் இளகாததைக் கண்ட ஆசிரியர் பாலு ஏமாற்றமடைந்தான். அச்சத்தோடு பேசினான் 'அய்யா இந்த ஒரு முறையும் என்னை மன்னித்துவிடுங்கள்' 'அது முடியாத காரியம்' பாதிரியார் பயமுறுத்தினார். 'வருகிற மாதச் சம்பளத்திலே பிடித்துக் கொள்ளுங்கள் அய்யா, என் பிள்ளை குட்டிகளுக்காகவாவது என்னை மன்னித்து விடுங்கள்' என்று கெஞ்சினான் பாலு. 'வககற்ற பயகளெல்லாம் வாத்தியான் வேலைக்கு வந்துட்டு—உங்களப்பன் வீட்டுப் பணம்னு நினைச்சுக்கிட்டு எடுத்தியோ? உங்களுக்கெல்லாம் புத்தி புகட்டினாத்தாண்டா அடுத்தபயக எவனும் இம்மாதிரி செய்யமாட்டான். அதை விட கிணறு குளத்திலே விழுந்து சாகலாமே' என்று சீறினார் பாதிரி.

தன் ஒருவனால் தன் இழைத்த பிழையால் ஒரு குடும்பம் ஆதரவற்றுச் சீரழியப்போகிறதே என்று எண்ணிப் பார்த்தபோது அவன் இதயம்வெடித்து விடும் போலிருந்தது. பாலு வடித்த கண்ணீர் எதுவும் அவர் மனதைக் கரைக்கவில்லை. பாலு செய்து விட்ட அந்தப் பிழைகள் ஒரு முறை அவன் முன் உருண்டு வந்தன. அழகுப்பட்டியில் உள்ள பள்ளிகூடத்தின் நிர்வாகியாகப் பணியாற்றிய பாதிரியாரின் அழைப்பின் மீது ஆசிரியனாகப் பணியாற்ற வந்தான் பாலு. கூடவே அவ்வூரின் அஞ்சல் நிலையத்தின் பொறுப்பாளனாகவும் பணியாற்றினான். எனினும் அவனது முக்கால் டசன் குழந்தைகளோடும் மனைவியோடும்வாழ்ந்ததால் வாழ்க்கைச் செலவுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது.

ஒருநாள் அவனுக்கு மிக்க அவசியமும் அவசரமான செலவு வந்து தலையில் விழுந்தது. ஏற்கனவே தாங்கமுடியாத அவனுக்கு மேலும் செலவு வந்தால் எவ்வாறு தீர்க்க முடியும்! யார் யாரிடமோ வெட்கத்தை விட்டு கடனாகக் கேட்டுப் பார்த்தான். கிடைக்கின்றதாகவேஇல்லை. துணிந்தான், அஞ்சல் மனையின் இருப்புப் பணத்திலிருந்து இருபது ரூபாய் எடுத்துச் செலவிட்டான், மறுநாள் பாதிரியார் இருபது ரூபாய் கொடுத்து மணியார்டர் செய்வதற்காகச் சொன்னார், எடுத்த பணத்தை நிரப்பிவிட்டு, பின்னால் பாதிரியார் பணத்தை அனுப்பி விடலாமென்று துணிந்து பணம் அனுப்பியாகி விட்டது என்றபொய்யைச் சொன்னான். இப்படியாக நாட்கள் கடந்தன.

பணம் அனுப்பியமைக்கு பெற்றுக்கொண்ட இடத்திலிருந்து பதில் வராமற் போகவே பாதிரியார் பாலுவைக் கேட்டார். பாலு பயந்தபடி உண்மையைக் கூறினார், பாதிரியாரோ எரிமலையாக மாறினார். 'உன்னை விட்டேனு பார்' என்று சூளுரைத்தார். மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார். பாலு பாதிரியார் கால்களிலே விழுந்தான் மானத்தைக் காப்பாற்றுங்கள் எனக் கெஞ்சினான். அழுதான். கதறினான், எந்தப் பயனுமில்லை, பாதிரியார் தன்னுடைய இருதயத்தை இடம் மாற்றி விட்டாரோ என்னவோ! மறு நாள் ஞாயிற்றுக்கிழமை மேலதிகாரிகளும் போலீசாரும் வந்து அவனைக் கைது செய்யப் போகிறார்கள் என்ற சேதி திறந்தவெளிச் சூறாவளிபோல் ஊர் முழுமையும் தெரிந்து விட்டது.

பாலுவின் கண்ணெதிரே ஆர்ப்பரிக்கும் கடல் தெரிந்தது. சுழன்றோடும் ஆறு தெரிந்தது துடிக்க வைத்து உயிரைக் கடத்திச் செல்லும் நஞ்சுத் துளிகள் தெரிந்தன, ஆனால் அவன் குடும்பம்—மனைவியும் மக்களும் நாதியற்றவர்களாய் நடைப் பிணங்களாய் வீதியிலே பிச்சை எடுக்கும் பரிதாபகரமான காட்சியும் தெரிந்தது. அவன் சித்தம் கலங்கியது.

மாலைப்பொழுது வந்தது. போலீசாரும் வந்தனர், பாலுவைத் தேடினர், அவனைக் காணவில்லை. ஓடிவிட்டான் என்றனர் சிலர், 'தெரியுமே! அவன் தான் மகா அயோக்யனாயிற்றே. கம்பி நீட்டிவிட்டான் பயல்' என்று சில குரல்கள் எழுந்தன, 'பயலைப் பிடியுங்கள் எங்கிருந்தாலும் சரி' என்று கூறிவிட்டார் பாதிரி.

ஒருவன் பதறித் துடித்தபடி ஓடி வந்து நாக்குளறியபடி 'அய்யா நம்ம கோயில் கிணத்திலே வாத்தியார் அய்யா பிணம் மிதக்குதுங்க' என்றான். எல்லோரும் திகைத்தனர், போலீசார் பாலுவைக் கைது செய்ய முடியவில்லை, அவன் பிணத்தைத்தான் தூக்கிச்சென்றனர், ஊர் திரண்டு அவனுக்காக கண்ணீர் வடித்தது, பாதிரியின் இரும்பு இதயத்தை துளைக்கும் சொற்கள் வந்து குவிந்தன, ஆனாலும் போன உயிர் திரும்புமா!

பாதிரிமார்களால் பரலோகப் பிதா ஓய்வு பெற்றதாகக் கற்பிக்கப்படும் அந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஏழை ஆசிரியன் பாலு தன் மனைவி மக்களைக் கதற விட்டு விட்டு இந்த உலக வாழ்விலிருந்து ஓய்வு பெற்று விட்டான்!

திராவிடன்

சென்னை : 9–12–55 : வெள்ளி

'ஆசிய ஜோதியின் அனந்தசயனம்!'

தஞ்சை—திருச்சி-மதுரை-இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள், கடும் புயலாலும் பெரு மழையாலும் தாக்கப்பட்டு பலவித கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கும் செய்தி நம்மை திடுக்கிட வைக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன் தஞ்சைத் தரணியிலும் திருச்சியில் சில பகுதிகளிலும் கடும்புயலினுல் ஏற்பட்ட சேதாரத்தையும் அதனுல் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரையும் சரிவரத் துடைக்க முடியாத நிலையில்தான் நமது ஆட்சிபீடம் இருந்து வருகிறது. இதற்குள்ளாக வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவது போல, தஞ்சை திருச்சி மாவட்டங்களுடன், இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களையும் சேர்த்து—புயல், தனது கொடுமையையும் கோரச் செயலையும் காட்டியிருப்பது கண்டு திகைப்படுகிருேம்.

மூன்ருண்டுகளுக்கு முன்பு வீசிய புயல், பெருத்த பொருள் நட்டத்தையும் ஓரளவு உயிர்ப் பலிகளும் கொண்டன. ஆனுல் இப்போது வீசிய புயல் ஏராளமான உயிர்களை—மக்களின் மகத்தான உயிர்களை நாசம் செய்திருக்கிறது.

மக்களின் நிலையே இதுவென்ருல், கால் நடைகள், பயிர பச்சைகள், வீடுகள், பெருங்கட்டிடங்கள், உணவுப்பொருள்கள் ஆகியவைகள் பாழாக்கப்பட்டிருக்கும் விவரத்தை அறியும்போது நாமோ நமது தமிழகமோ தாங்கிக் கொள்ள முடியாத கொடுமையாக அச்சம்பவங்கள் அச்சத்தை யூட்டுகின்றன.

இந்நிலையில், சென்னை அரசியலார்—குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று நிவாரணவேலைகளில் ஈடுபட்டிருப்பது கண்டு சற்று ஆறுதல் அடைகிருேம். எனினும் நம் மாநில அரசியலாருக்கு உள்ள வசதியும், உரிமையும் கடும் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் நலிந்த வாழ்வைமுழுதும் நிலை பெறச் செய்துவிட முடியும் என்று கூறுவதற்கில்லை. அந்த வகையில் நமது மாநில அமைச்சர் குழுவை, டில்லி ஆதிக்கம் குனியவைத்து தர்பார் நடத்தி வருகிறது.

எனவே, புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு முழு நிவாரணத்தை—அதுவும் உடனடியாக அளிக்க வேண்டிய கடமைப் பட்டிருப்பது நேரு பண்டிதரின் சர்க்காரேயாகும். ஏனெனில் ஆண்டு தோறும் நம் மாநிலத்திலிருந்து ஏறத்தாழ 50 கோடி ரூபாய் வரை—வரி என்ற பேரால் (மாநிலத்தின் மொத்த வருமானத்தின் சரி பகுதியை) வசூலித்துச் செல்லும் இந்தியப் பேரரசினர் தமிழகத்தின் கண்ணீரதைத் துடைக்க வேண்டிய கடமைப்பட்டவர்கள் என்பதை கண்ணியம் உள்ள அனைவரும் மனதார ஒப்புக்கொள்வர்.

ஆனுல் டில்லி ஆட்சி பீடத்தின் முதல்வரான நேரு பண்டிதரோ—இதுவரை. இதுகுறித்து அக்கறைகாட்டினுரில்லை, ஆறுதல் மொழியாகிலும் கூறினுரா யென்ருல் அதற்குக்கூட பஞ்சந்தான்!

ஆனுல் இதே நேரு பண்டிதர்தான், இரண்டு திங்களுக்கு முன் உத்திர பிரதேசத்தில்—பெரும் வெள்ளத்தால் ஏற்பட்ட இன்னல்களை தீர்க்க வரிந்து கட்டிக்கொண்டு ஓடினுர்—அங்கேயே சில நாட்கள் முகாம் அடித்து நிதி திரட்டினுர! தமது மாநிலமாகிய உத்திரப்பிரதேச மக்களின் இன்னல்களைத் தீர்த்தார்!

அந்த மனவளம் தென்னுட்டுப் பிரச்னைகளில் மட்டும் நேரு பண்டிதருக்கு உண்டாவதில்லை.

வடநாட்டைப் பொறுத்தவரை அகதிகள் பிரச்னை யென்ருல் நேரு பண்டிதரின் ஆட்சி துடி துடித்து ஆவன செய்யும். ஆனுல் இலங்கையில் தென்னுட்டவர்கள்கொடுமைக்கு ஆளாகியிருக்கின்றனரென்ருல், ஆருடம் பார்த்துக்கொண்டு பாட்டிக் கதை பேசும்!

இத்தகைய போக்குடைய நேரு பண்டிதர்தான் மனிதருள் மாணிக்கம்! மாகாண வெறி சிறிதும் இல்லாதவர்! இந்தியா அனைத்தும் ஒன்று என்ற பெரு நோக்கு கொண்டவர்! என்றெல்லாம் விளம்பரப் படுத்தப்பட்டு வருகிருர்!

ஐந்தாண்டுத் திட்டங்களில்தான் தென்னுடு வஞ்சிக்கப்படுகிறதென்ருல், இவ்வித நெருக்கடியான சமயங்களிலுமா டில்லி ஆதிக்கவர்க்கம் சிறிதும் கவலையின்றி அனந்தசயனம் கொள்வது? இது நேர்மைதானு, நாணயந்தானு என்று கேட்கிருேம்.

நிற்க—தி. மு. கழகம் இப்போதைய புயல் கொடுமையால் அவதியுறும் மக்களுக்கும் உதவி செய்ய வேண்டி, சென்னை முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதிக்கு ரூபாய் ஆயிரம் அனுப்பப்பட்டிருப்பதுடன், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆவன செய்து வருகின்றனர். அதுபோலவே மற்ற கிளைகளும் நிவாரணப் பணியில் ஈடுபடுமாறு பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளதை தி. மு. கழகத் தோழர்கள் மட்டுமல்லாது மற்ற கட்சியினரும் தோழமையுடன் கவனித்து உதவி செய்யுமாறு வேண்டிக் கொள்கிருேம்.

சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள் எல்லா கட்சியினருடைய ஒத்துழைப்பையும் பெற்று நிவாரணப்பணியை விரைவில் நிறைவேற்ற முனைந்திருப்பது பாராட்டத்தக்கதெனினும், நேரு சர்க்காரும் தங்களின் கடமையை உடனடியாகச் செய்யுமாறு வற்புறுத்த வேண்டுமென்பதை நாம் எடுத்துக்காட்ட விரும்புவதுடன் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நமது ஆறுதலையும் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிருேம்.

●

நடக்க இருப்பவை

பெருந்துறை

தி. மு. கழக சார்பில் 9—12—55 வெள்ளி மாலை 6-மணிக்கு பழமுபஸ்டோர் திடலில் பொதுக் கூட்டம் நடைபெறும். துணைப்பொதுச் சேயலாளர் என். வி. நடராசன், ஈரோடு அப்பாவு பேசுவர்.

ஈரோடு

10-12-55 சனி மாலை 6-மணிக்கு ஜின்னு திடலில் தி. மு. கழக சார்பில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், எஸ். அப்பாவு பேசுவர்.

சென்னை 12-வது வட்டம்

தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் 10-12 55 சனியன்று காலை 10-மணிக்கு ஆர்பர் அடுத்த நாராயண சராங் தோட்ட தெரு 38-வது இல்லத்தில் நடைபெறும் என பொருளாளர் எ. கண்ணப்பன் அறிவிக்கிருர்.

திரைப்படக் காட்சி

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக வளர்ச்சிக்காக 11-12-55 ஞாயிறு காலை 10-மணிக்கு பிரபாத் டாக்கிசில்—மணமகள் திரைப்படக் காட்சி, கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடைபெறும். கட்டணம் வழக்கம்போல.

செங்கற்பட்டு

தி. மு. கழக சார்பில் மாநில மாநாடு நிதி அளிப்புக் கூட்டம் 11-12-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி தலைமையில் தர்க்காதிடலில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி கல்யாணசுந்தரம், சத்தியவாணிமுத்து பேசுவர்.

கோபிசெட்டிப் பாளையம்

11-12-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு தி. மு. கழக சார்பில் பெரியார் திடலில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், எஸ். அப்பாவு பேசுவர்.

சென்னை மாவட்ட தி. மு. க.

செயற்குழு கூட்டம் 11-12-55 ஞாயிறு மாலை 3-மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் நடைபெறும். என செயலாளர் இளம்பரிதி அறிவிக்கிருர்.

மதுரை மாவட்ட தி. மு. க.

திலக் கோட்டையில் 15-12-55 மாலை 3-மணிக்கு செயற்குழு கூட்டம் நடைபெறும். அது சமயம் பொதுக் குழு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதும் மற்ற பிரச்னைகளும் முடிவு செய்யப்படும் என செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிருர்.

தலைமைக் கழகம் : அறிக்கை 33/55

புயல் நிவாரணம்

●

கடும் புயலாலும், பெரு மழையாலும் தாக்கப்பட்டு தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மீளாப் பெருங்கேடுகளுக்கு ஆளாகியிருக்கும் செய்தி நம்மையெல்லாம் திடுக்கிட வைத்து திகைப்படையச் செய்கிறது. புயற்காற்றும், வெள்ளமும் நூற்றுக் கணக்கானவர்களின் உயிர்களை வவ்வி, ஆயிரக் கணக்கானவர்களை ஊனப்படுத்திப், பதினுயிரக் கணக்கானவர்களைத் திக்கற்றவர்களாகத் திரியவைத்துக், கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள பயிர்பச்சைகள்—மரஞ்செடிகள்—தோட்டந்துறவுகள்—வீடுகள்—பெருங்கட்டிடங்கள் — உணவுப்பொருள்கள்—கால்நடைகள் ஆகியவற்றைப் பாழாக்கியிருப்பது, தமிழகம் தாங்கிக்கொள்ள முடியாத பெருந் துக்கமும் துயரமும் நிறைந்த செய்தியாகும்

புயலால் பாதிக்கப்பட்டு வாடுபவர்களுக்கும், உற்றூர்—உறவினரை இழந்து வருந்துபவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிருேம்.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்க நிவாரணமளிக்க அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளும், சென்னை அரசாங்க முதலமைச்சர் அவர்களும் முன்வந்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது சற்று ஆறுதலளிக்கக் கூடியதாக இருக்கிறது சென்னை அரசாங்கம் மிகத் தீவிரமான நிவாரண நடவடிக்கைகளில் மேலும் இறங்க வேண்டும் என்று சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதோடு, இந்தியப் பேரரசு சென்னை அரசாங்கத்துக்குப் பக்கத்துணையாக இருந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியப் பேரரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிருேம்.

புயலால் தாக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத் தோழர்களும் ஆங்காங்கு ஏழை எளியவருக்கு உதவி செய்யும் நிவாரண வேலைகளில் உடனடியாக இறங்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிருேம். பிற மாவட்டங்களிலுள்ள கிளைகளும், கழகத் தோழர்களும், உணவு-உடை-உறையுளுக்கு வேண்டிய பொருள்கள்—பணம் ஆகியவற்றைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உரியவர்கள் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். நிவாரண வேலைகளில் பிற பொதுநல ஊழியர்களோடும், பிற கட்சியினரோடும் இணைந்து நின்று பணிபுரிய வேண்டி ஏற்படின், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

புயல் நிவாரண நிதிக்கு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சென்னை முதலமைச்சரிடம் ரூ. 1,000 (ஆயிரம்) அனுப்பப்பட்டிருக்கிறது.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானு ரசியா!

கௌதமன்

25—11—55 தொடர்ச்சி

10

அரண்மனை-நந்தவனம் - மாளிகையின் மேல்தளம்-போன்ற எந்தெந்த இடங்களிலெல்லாமோ, அந்தச் சாந்தி பரவியிருந்தது! ஜமாலின் சிறு உருவம் அங்கெங்கெல்லாம் உலவித் திரிந்தது. ரஸியாவின் அழகுருவமும் அங்கு அவனுடன் கொஞ்சிகுலவி இதய நிழலாகித் தொடர்ந்தது! சுருங்கச் சொன்னால், காதல் வாழ்வு பெற்றோர் அனுபவிக்கும் தித்திக்கும் சூழ்நிலையை அவர்கள் சுலபமாக, சுவைத்து அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்களின் இந்த மகிழ்வுப் பெருக்கு இறுதியில் வானவில்லாகி மறைந்தே போகுமென்பதை அவர்களெங்ஙனம் அந்த நேரத்திலே அறிய முடியும்! ஜமாலின்மீது உயிரையே வைத்துக் கொண்டிருந்த அந்த வளர் மதிக்கு, எதிர்ப்புக் குவியலாக-காரிருள் கப்பிய முகிற் கூட்டங்களாக பல்வேறு தடைக் கற்களெல்லாம் வந்து வாய்க்குமென்பதை அவர்களெங்ஙனம் அப்போது அறிய முடியும்...!

பசித்தபோது புசித்தவனைப்போல சித்தம் சோர்ந்தபோது இருசாராருக்குமே அங்கே கிடைத்திட்ட இன்பப் படையலிருக்கிறதே அதற்கிணை எதுவாகத்தானிருக்க முடியும்...? அன்புக் கிளியே—பசுந்தோகை மயிலே—பரவசத்தின் பொக்கிஷமே — இன்பத்தின் புஷ்பமே-என்று சொன்னால்மட்டுமே சாந்தியடையும் சாகஸக்காரர்களை உலகின் அரச மாளிகைகள் ஏராளமாகக் கண்டிருக்கின்றன என்றாலும், இளவரசி ரஸியாவுக்கு மட்டும், ஜமாலின் மௌன விழிகள் அளிக்கும் சுவை விருந்து மட்டுந்தான் ஒரு விருந்தாக அமைந்தது!

எனவே ஜமாலில்லாத வாழ்க்கை பனிசூழ்ந்து செயலற்றுக் கிடக்கும் கடல் நீரைப் போன்றதோர், துயர் உறைந்த வாழ்க்கையாக மட்டுமே இருக்க முடியுமென்று, அந்தக் கட்டிளங் குமரியும் முடிவுசெய்து விட்டாள்!

கானகத்தை நோக்கி அவள் வேட்டைக்குக் கிளம்பும்போது, ஜமால்தான் அந்த அரும்படைக்குத் தளபதி. ஆளும் மன்றம் செல்லும்போது, ஆலயத்துள் நுழையும் போதும், இந்தப் பேரரசியின் உயிரைப் பாதுகாக்கப் பலரிருந்தும், அருகிலே ஜமாலிருந்தால்தான் அவளுக்கு அந்த நடைப்பயணம் ருசிக்கும்! அவளின் கண்கவரும் நடையழகு—அப்போதுதான் அவளின் உடையழகையும், உடலழகையும் கூட அதிகப்படுத்திக் காட்டும்! செம்பும், எக்களிப்பும் வழிகாட்ட, மலர்விரித்த மஞ்சம் செல்லும் எழில் ராணிபோல, உணர்ச்சி ததும்ப நடந்துபோக அவளுக்கும் அப்போதுதான் ஆர்வம் பிறக்கும்! ஜமாலில்லாவிட்டால் பனிஉறைந்த கடலாகும் அவள் நிலை...! ஜமாலருகிலிருந்தால் பனி உருகும் சுவையான கோடை அவள் வாழ்வு!!

அழகான தந்தக் கட்டில்; அதிலே அந்தத் தங்க மேனியாள் தன் தளிர் உடல் மறைத்துச் சாய்ந்திருப்பாள்! அருகிலே ஆடலழகிகள் அவளின் துடிக்கும் இளமைக்குப் புது மெருகிட்டுக் கிடப்பர்! ஒருவள் மெய் வருடுவாள்; மற்றொருவள் தைலமிட்டுஅவளின் கருங்கூந்தலை மணங்கமழும் மலர்த்தோட்டமாக்குவாள்! வேறொருவள், வாசமலர்ந்த பன்னீரில் நனைத்த மென்மைத் துணியால், அவளின் பளிங்கு முகம் துடைப்பாள்—பிறிதொருவள் திறந்திருக்கும் வானம்போல, ஒளி விட்டுக் கிடக்கும் அவளின் மலர்மேனியை மூடி மறைக்கப் பட்டுடை கொண்டுவர ஓடி மறைவாள்! வருவாள்! போர்த்துவாள்! வேறொருவள்—முத்துக்கொண்டு வருவாள்—வைரத்தை மற்றொருவள் அணிவிப்பாள் — தங்க அணிகளைப் பூட்ட வேறொருவள் காத்துக் கிடப்பாள்! மென்துகிலைத் தூக்கி எடுத்து ஒருவள் நின்றிருப்பாள்; மாலைக்கு வேண்டியமனோரம்மியமான அலங்காரங்கள் முடிந்தபின், மலர்முகம் நீக்கி, அவளின் பொன்னுடலிலே அதைப்போர்த்தியும் விட்டு விடுவாள்! பழரசம் காத்துக் கிடக்கும் தங்கத்தட்டிலே-அழகுராணி அதைக் கையிலே தொட்டுக் கொண்டே ஆடலழகிகளைப் பார்ப்பாள்!

அந்த இளம் மயிலின்பார்வை நுணுக்கமறிந்தோர் மெள்ள புன்னகையால் அவளைக் கேலி புரிந்து கொண்டே அங்கிருந்து மறைவர்!! பழரசம் பறிமாறப்படும். ஜமால் ஒன்று—ரஸியா ஒன்று...! ஹும்! பழரசம் மட்டுந்தானா...! இனிமைக்கு எல்லைக் கோடமைக்கும் காதல் ரசத்தையும் கூட அவர்கள் பருகத்தானே செய்வர்...! இப்படி எத்தனையோ நாட்கள்...! அந்த அந்தப்புரத்தின் சுவர்களுக்கும், கட்டில்களுக்கும் பேசமட்டும் தெரிந்திருந்தால் —...அப்பப்பா...எவ்வளவு சுவையான சம்பவங்கள் எழுத்தோவியமாகியிருக்குமிங்கே...! கணக்கிலா அடங்குமவைகள்.! அந்த அந்தப்புரத்தில் துரதிர்ஷ்டவசமாக ஓரிருத்தி—இப்போதெல்லாம் வெளி வருகிறதே ஒரு சில வேடிக்கையான பத்திரிகைகள் பிழைப்பதற்கென்றே, அவள் இப்படி...இவள் அப்படி...என்று அதைப்போன்ற ஓரிரு பத்திரிகைகளுக்கு வேவு பார்ப்பவளாகமட்டுமிருந்திருந்தால்...ஆஹா! எவ்வளவு மயிர்க் கூச்செறியும் சம்பவங்களெல்லாம்வெளி வந்திருக்கும்...ஆனால் அது அந்தக் காலமாயிருந்ததால்...இது போன்ற கேலிகள் எழவில்லை...! அங்ஙனம் கேலி புரிந்தால்தான் தாம் பிழைக்க முடியுமென்ற வசைமாரிக் காரர்களும் அங்கு இல்லை!

இப்போது அவைகளெல்லாம் நிகழ்வதாயிருந்தால் எவ்வளவு ஏளனம்—கிண்டல் கிளம்பும்...! பிரிட்டிஷ் இளவரசி 'மார்க்ரெட்டின் காதலுணர்ச்சிகளுக்கு மதத்தரகர்கள் எவ்வளவு எவ்வளவு தடைக் கற்களை குவித்து வைத்தார்கள்...! உலகின் பத்திரிக்கைகள் எவ்வளவு விமர்சனங்களை எழுதித் தீர்த்தன...! காதற் கடிதங்கள்—காதல்சந்திப்புக்கள்—காதல் விளையாட்டுக்கள்—போன்ற எண்ணிலடங்காத எவ்வளவு சேதிகளை அவைகள் பிரசுரித்துக் காட்டின...! ஆனால் பலன்...!! விஷயம் வெளியாகி—வேதனை மேலிட்டு காதலுடைந்து—கடிமணம் ரத்தாகி—கண்ணீர் குளமாகி மார்க்கரெட்டின் உள்ளம் உடைந்ததுதானே பாக்கி...! பாவம்...! அந்த இளவரசியின் வருங்காலம்தான் எவ்வளவு பாதித்துக் கிடக்கிறது இதனால்...?...போகட்டும்...!!.

இளவரசி ரஸியாவுக்கு இவ்வளவு பெரிய உலகப் பேரிடிகள் கிடைக்காவிட்டாலும்; உள்நாட்டுக் கண்டனக் குரல்களும், கேலிகளும், வசைமாரிகளும் இந்த அளவுக்கு எழாதிருந்தாலும்; அவளின் அந்தப்புரம்—அரசமன்றம்—அங்கிருந்த தருக்கிய பிரபுக்கள்—மதத்தின் தலைவர்கள்—இப்படிக் கிடந்தார்களே...அதிகாரத்தின் மறைமுகத் தலைவர்களாக. அவர்களுக்கு மட்டும் இந்தக் காதல் ரகசியம் புரியாமலிருக்கவில்லை...! மெள்ள, மெள்ள, அவர்கள் காதுகளுக்கு மட்டுமல்ல; கண்களுக்கும் அந்தக் காதல் விருந்தின் பொருமைக் காட்சிகள்...தோன்றி தோன்றி மறையத்தான் செய்தன...!!

'அடிமைப் பயலுக்கு இவ்வளவு அந்தஸ்தா...! அரசியின் கொட்டந்தான் என்னே...!' இப்படிக் கிளம்பியது கூக்குரல்...! இளவரசி ரஸியா நினைத்திருந்தால், இந்தச் சம்பவங்களை மாளிகையின் இரகசிய அறைகளிலேயே மறைத்து வைத்து விட்டிருக்கலாம்... ஆனால் ஜமாலிடம் அவள் காட்டிய அபரிமிதமான அன்பு அவளின் செயல்களுக்கே திரையிட்டு மறைத்து விட்டதென்று சொன்னாலும் மிகையல்ல அது...! 'தாம் எதைச் செய்கிறோம்...? இதன் விளைவுகள் என்ன...! தாம் யார் யாரிடம் யார் யார் எதிரில் பேசுகிறோம்...! நம்முடைய எதிரிகள் யார்! அவர்கள் தன்னுடைய இந்த பலவீனத்தை எப்படி, எப்படி யெல்லாம் பயன்படுத்திக் கொள்வார்கள்...!' என்பன போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை அறவே மறந்து விட்டாள் ரஸியா! மறக்கச்செய்து விட்டது அவளின் புதுக் காதல்! இதன் எதிரொலிதான் — நாட்டிலே பெரும் புரட்சி தோன்றுமளவுக்கு சூழ்நிலைகளை வளரச் செய்து விட்டது!

இந்தச் சம்பவத்தை ஓர் சரித்திராசிரியர் குறிப்பிடும்போது:-

"Yet Razia stood at lengnth to the fraility of her sex; She became doatingly attached to an Abbisiniyan Lad named Jamal, whose sudden elevation to the highest dignities, was ill crooked by the great Lords. and omrahas of the Empire Their dis-content was soon matured into insurrection"

'History of British India'

'இதோடு ரஸியா அவளின் பெண்மையின் மென்மை நெகிழ்ச்சிகளுக்கும், இறுதியில் அடிமையாகி நின்று விட்டாள்...! அவளோர் அபிசீனியவாலிபன் ஜமால் என்பவன்மீது அளவு கடந்த அன்பும் பிரேமையும் காட்டுபவளாக ஆகிவிட்டாள்; அதனால் அந்தவாலிபன் திடீரென்று உயர்நிலைக்கும், நல்ல அந்தஸ்த்திற்கும் உயர்த்தப்பட்டான்—ஆனால் இது, நாட்டின்உயர்ந்த ஓமிராக்களுக்கும்—பிரபுக்களுக்கும் பிடிக்கவில்லை...! இதையவர்கள் மிக மிக ஆத்திரத்தோடு சகித்துக்கொண்டனர்! இந்த அவர்களின் அதிருப்தியும், வெறுப்பும், வெகு விரைவில் புரட்சி ருபத்திலும் உருவாகி விட்டது...!' என்கிறார் அந்தச் சரித்திராசிரியர்...!

இளவரசி ரஸியாவின் ஆளுந்திறனைப் பற்றியெல்லாம் தொகுத்து எழுதிக் கொண்டே வந்த அவர்—அவளோர் பெண் என்பதற்காக அவளாட்சியையும், மற்றவர், பெண்மையாட்சி, என்று தவறாகக் கருதினர்; கேலியாக நினைத்தனர்; என்கிறார். அதோடு அவள்மீது மற்றவர் கண்ட குறைகளுக்கும், அதிருப்திக்கும் மேற்கண்டவாறு சில பல விளக்கங்களையும் தருகிறார்!

அந்த விளக்கங்களும் குற்றச்சாட்டுக்களும், ஓரளவுக்கு மட்டுமல்ல; முழுக்க முழுக்கவும் உண்மையாகத்தானே இருக்கிறது...! நாட்டின் ஆட்சிமுறையிலே அவள் காட்டிய அக்கரையைப் போல தன் அகரத்துடிப்பை அடக்கிக்கொள்ளவும், அவள் மார்க்கம் கண்டதிலேதான் வேதனைப்புயல் அந்தபுரத்தையும் நோக்கியும், வீச வாய்ப் பேற்படலாயிற்று, ஆனால் ஆளும்கலையிலே ஞானோதயம் கண்டவளைப்போல விளங்கிய அந்த எழிலரசிக்குப் பருவதாகம் ஏற்படக்கூடாதென்பது மட்டும் என்ன நியதி!? இந்தக் கேள்வியை ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொள்ள மறந்து விட்டு விட்டனர் என்பதை விட மறுத்து விட்டனர் என்பதுதான் பொருத்தம்!

'ஆள்வதிலே தவறில்லை—ஆனால் நடைமுறைதான் பிடிக்கவில்லை...!' 'மதப்பற்றுண்டு இளவரசியாருக்கு ஆனால் மதச்சட்டங்களைத்தான் சரியாக அனுஷ்டிப்பதில்லை...' குரானை அவர்கள் உச்சரித்துப் படிப்பதைப்போல, வேறெவராலும் படிக்கமுடியாது தான்—ஆனாலும், பர்தாவை அவர்கள் ஏனோ வெறுக்கிறார்கள்—! அதையவர்கள் அணிவதிலலையே!!' 'போர்முறை தெரிந்த இளவரசியார், அதைக் கட்டுதிட்டங்களையும் மீறிவெளிப் படுத்தவும் கிளம்பி வந்ததுதான் வேதனையாக இருக்கிறது...!' 'ஆடவர் மத்தியிலே, இஸ்லாமிய ஆரணங்கு முகமூடியில்லாமல் உலவித் திரிவதுதான் எமக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!'

என்று இப்படியெல்லாம், அவள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் சிலபலர் முணுமுணுத்துத் திரிந்தனர் என்றாலும் அதனை மக்கள் வெகுவாக ஏற்றுக் கொள்ளவில்லை! ஆனால் அவர்களின் செவியிலே புகுவதற்கு மட்டுமல்ல; அவர்களின் கோபத்தைக் கிளறுவதற்கும், ஏற்ற அளவிலே எடுகது வீசப்பட்ட இந்த துரதிஷ்டமானகுற்றச்சாட்டுக்களுக்குத்தான் மக்களும் மயங்கினர்; செவி சாய்த்தனர்!

ஆள்பவரிடம் குறை காணுவதும, ஆட்சியிலே தவறு காணுவதும் இயற்கை—அரசியல் விவகாரமும் கூட! ஆனால் அந்தப்புரங்களுக்குச் சென்று தனிப்பட்ட குற்றச் சாட்டுகளைத் தேடி திரட்டி வருவதென்பது, அரசியல் நாகரீகத்திற்கும் அப்பாற்பட்ட செய்கையாகும்! ஆனால் அந்தச் செயல் தான் இனித்தது அங்கிருந்தோருக்கு!!

'இளவரசி என்ன செய்துகொண்டிருக்கிறாள்? இப்படிக் கேட்பவர்களிருந்தார்களங்கே!

'பார்த்தாயா அந்தக் குதிரைக்காரப்பயல், உள்ளே போவதை! அதோ! நுழைகிறான் பார்! அவன் பெறும் வரவேற்பைக் கூர்ந்து கவனி!' என்று கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு ஒதுங்கி யிருந்தோருமங்கே இருக்கத்தான் செய்தனர்!

'இந்த அற்பப் பயலுக்கு என்ன துணிச்சல்! இளவரசியை விட்டுப் பிரிய மாட்டேனென்கிறானே! என்று கொக்கரித்தோரு முண்டு. ஆனால் இவர்களின் ஏகபோக கொக்கரிப்பும், ஆர்ப்பாட்டமும் தான்! பிற்காலத்தில் ரஸியாவுக்கு அளவு கடந்த தலைவலியைக் கொடுத்தவைகளாகும் இந்தவேவுகாரர்க்கும் அரசியல் வாய்ப்புக்காரர்களின் தூற்றலினால்தான் ரஸியா வேதனைச் சுரங்கத்திற் கழைத்துச் செல்லப் பட்டாள்! [தொடரும்]

அடுத்த வாரம்

16—12—55 திராவிடன் இதழில் பாலைவன ரோஜா—கேள்வி பதில்—கூத்தரசன் மடல்—கலையரங்கம் முதலியன வெளிவரும். —ஆ-ர்.

மாநில மாநாட்டு நிதிக்காக

பொதுச் செயலாளர்
இரா நெடுஞ்செழியன் தலைமையில்
நடிப்புப் புலவர்
கே. ஆர். இராமசாமி அவர்கள்

10-12-55 சனிமாலை 6-மணிக்கு
கோகலே மண்டபத்தில்
இன்னிசை விருந்து அளிப்பார்

நன்கொடை ரூ. 2, 1.
—சென்னை மாவட்ட தி. மு. க.

நேற்று பெய்த மழையில், இன்று முளைத்த காளான்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் அழகு தமிழ்க் கவிதைகளில் உள்ள கருத்தாழத்தையும், சொல்லழகையும் தமிழ் மக்கள் நன்கறிவர். அவரது கவிதைகளைப் படிக்கும்தோறும் நமக்கு ஏற்படும் உணர்ச்சியும் மொழிப்பற்றும் சொல்லத்தரமன்று. இதையும் தமிழர்கள் நன்கறிவர். அவருடைய கவிதைகளை தமிழ் மக்கள் நன்கு படித்துணர்ந்து பயன் பெற்றனர். அதோடு மட்டுமல்ல இத்தகைய அரிய கவிதைகளைத் தமிழகத்திற்கு அளித்தமைக்காக தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர் அனைவரும்—தம்நன்றியுணர்ச்சியைத் தெரிவிக்கும் பொருட்டும் — அவருடைய கவிதைகளைப் பாராட்டும் வகையிலும்— அவருடைய எழுத்துவன்மை மேலும் மேலும் அதிகரிக்க அவரை ஊக்குவிப்பதற்காகவும்—தமிழர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் திடலில் — பல்லாயிரக் கணக்கான மக்கள் கடலின் முன்னிலையில்—பொன்னாடை போர்த்தும் விழாவும்—நிதியளிப்பு விழாவும் மிக விமரிசையாக நடத்திக் காட்டினர். புரட்சிக் கவிஞர் அவர்களை பெருமைப்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட அவ்விழாவில் தமிழர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பல்வேறு கட்சியினைச் சார்ந்த தோழர்கள் ஜீவானந்தம், செங்கல்வராயன், தமிழறிஞர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், இசையரசு தண்டபாணி தேசிகர், தோழர். ம. பொ. சிவஞானம், அறிஞர் அண்ணா ஆகியோரெல்லாம் கலந்து சிறப்பித்தனர் எனில்—கவிஞரது சிறப்பை நாம் விளக்கித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் தமிழகம் இல்லை. மேலும் கவியரசரின் சிறப்பைப்பற்றி எழுத முனைந்தால் எதை எழுதுவது எதை விடுப்பது என்ற நிலை ஏற்படும்.

இதையெல்லாம் ஏன் இங்கு எழுத வேண்டிய அவசியம் நேரிட்டதென்றால், "நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த முட்டைக் காளான்" ஒன்று புரட்சிக்கவிஞரின் புதுமைப் பாடல்களைக் குறை கூறுகிறது! கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து நடனமாடினாலும் சகித்துக் கொள்ளலாம்!

ஆனால் வண்ண மயில் நடனத்தை வான் கோழி குறை கூறுகிறது என்றால் ஆச்சரியம் அதிகமாகும்!

யார் அந்த வான்கோழி என்றெல்லாம் கேட்கத் துடிக்கும் தோழர்களுக்கு,

முதலில் ஒரு வார்த்தை! இந்த அளவுக்கு 'அதற்கு' மதிப்பளிப்பது நாம் மறுப்பெழுதுவது ஏனெனில்—புரட்சிக் கவிஞரைப் பற்றி அது கூறியிருக்கும் வார்த்தைகள் நெஞ்சைப்பிளக்கும் காரணம் தான் "திருடன்" என்று கூறுகிறது பாரதிதாசனாரை, திருட்டுடன் பிறந்துவிட்ட அந்த ஏடு!

நாம் மதிப்பளித்து மறுப்பு தரவேண்டிய அளவுக்கு தகுதி படைத்ததல்ல அந்த ஏடு! எனினும் அதனுடைய கருத்துக்களை மறுப்புரைக்கும்படி சவால்" விடுகிறது, ஆம்! வாய் விட்டுக் கூவுகிறது அந்த வான் கோழி!

"சாட்டை" என்ற தமிழரசுக் கழக ஏடு தன்னுடைய சேட்டையை பாரதிதாசனாரின் பாட்டிலேயே காட்ட ஆரம்பித்து விட்டது! அந்த சாட்டையைப் பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. இனி அதன் வாதத்தைப் பார்ப்போம்!

"இலக்கியத் திருடர்கள்" என்ற பெருந்தலைப்பிலும் — "பரிதாபத்திற்குரிய பாரதிதாசன்" என்ற துணைத் தலைப்பிலும் அந்த ஏடு எழுதுவதைப் பாருங்கள்:—

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்."

இது பாரதியாரின் பாடலில் உள்ள வரிகளாகும்.

பாரதியாருக்கு தமிழ், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம், பிரஞ்சு போன்ற பல மொழிகள் தெரியும், அந்த மொழிகளை ஆராய்ந்து பார்த்து உண்மையைக் கூறுகிறார்.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள் தமிழினும் வேறெங்கும் யாங் கண்டதில்லை.

இது பாரதிதாசன் பாட்டு பாரதிதாசன் பன்மொழி பயின்றவரா? சிறிதளவு பிரஞ்சையும் தமிழையும் தவிர வேறு ஏதேனும் அறிவாரா? இல்லை என்றால் எப்படிச் சொல்ல முடிந்தது இப்படி?

ஏடு எழுதுவதைப் பாருங்கள். கவிதைகளையும் பாருங்கள்!

யாமறிந்த மொழிகளிலே தமிழைப் போன்ற இனிமையான மொழி வேறு எங்கும் காணோம்—என்கிறார் பாரதியார்.

தமிழுக்கே சிறப்பளிக்கும் சொல்லை எங்கள் தமிழ் மொழியைத் தவிர வேறு எங்கும் கண்டதில்லை—என்கிறார்கவியரசர்.

பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

பெரும் புயல் வீசியதன் காரணமாகத் தஞ்சை — திருச்சி — மதுரை — இராமனாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருங்கேடுகளுக்கு உள்ளாகியிருப்பதாலும், கிளைக் கழகங்களை நிவாரண வேலைகளில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும், புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டியிருப்பதாலும் 18—12—55 ஞாயிறன்று குடந்தையில் நடக்க இருந்த பொதுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பொதுக்குழுக் கூட்டம் கூட்டும் விபரத்திற்குப் பின்னால் அறிக்கை வெளியிடப்படும்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

தமிழில் இருக்கின்ற சிறப்புகள் அநேகம்! அவற்றுள் நமக்கே உரித்தான "ழ"வும் ஒன்று. இந்த தனிச்சுவை தமிழைத் தவிர வேறெந்த மொழியிலும் இல்லை. இதை அனைவரும் உணர்வர். இதைத்தான் பெருமிதத்தோடு கூறுகிறார் கவியரசர். இதற்கு மொழி இயல்பினை அறிந்திருந்தால் போதும்.

இதற்கு அவ்வேடு கூறுவதுபோல் பன்மொழி பயில வேண்டுவதில்லை. மேற்கண்ட அளவோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை அந்த ஏடு; இன்னும் எழுதுகிறது! ஆம்! வான்கோழி இன்னும் கத்துகிறது!

"பாரதியின் கருத்தை எடுத்தார். அதைத் தன் பெயரால் வெளியிட்டுக் கொள்ள விரும்பினார்."

இப்படி பாரதியார் சொன்னதையே திருப்பிச் சொல்லும் சொந்தக் கற்பனையற்ற பாரதிதாசனை—அவரது கருத்துத் திருட்டை நாம் கண்டு பிடித்துக் கொடுத்தால் நன்றி செலுத்த வேண்டியதை விட்டு...?

பாரதியாரின் கருத்தை பாரதிதாசன் திருடினாராம்! எழுதுவது இலக்கியத் திருடர்கள் என்ற தலைப்பில். பின்னர் கருத்தை மட்டும் திருடினார் என்பது! என்னே விந்தையான வாதம்!

பாரதியார் பாடலின் கருத்தையும்— பாரதிதாசனார் பாடலின் கருத்தையும் ஓரளவுக்கு சிந்தித்துப் பார்ப்போர் உண்மையை உணர்வர். அவர் மொழியின் இனிமையைக் கூறுகிறார். இவர் மொழியில் உள்ள இனிமையைக் கூறுகிறார். இதைத் தெரிந்து கொள்ள முடியாத அந்த ஏடு, நம்முடைய அருமைக் கவிஞரை "திருடன்" என்று எழுதுவதோடல்லாமல்,

"நாம் சொல்லது தப்பாக இருந்தால் எடுத்துக் காட்டி எழுதட்டுமே பாரதிதாசனோ அல்லது அவரின் ஆதரவாளர்களோ."

என்றும் எழுதுகிறது, இந்த ஏட்டிற்கு நாட்டின் ஒப்பற்ற கவிஞர் மறுப்புத் தர வேண்டுமாம்! ஆசைக்கும் ஓர் அளவுண்டு!

இப்படியெல்லாம் எழுதுகின்றதே இந்த ஏடு—இது சார்ந்திருக்கும் இயக்கத்தை நடத்துகின்ற தலைவரான ம. பொ. சிவஞானம் அவர்கள் கவியரசர் பாரதிதாசனாரைப்பற்றிப் பாராட்டி கட்டுரை மட்டும் எழுதவில்லை. பாரதிதாசனின் நிதிக்குழுவில் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

அவர் பாரதிதாசனைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:—

"தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தோன்றி வந்த புலவர் பெருமக்கள் பலராவர். அந்தப் பரம்பரையில் சேர்த்து வைத்து எண்ணத்தக்கப் புலவர்களில் நமது கவிஞர் பாரதிதாசன் அவர்களும் ஒருவராவார்."

பாரதிதாசன் தமிழ் மொழிப் புலவர் மட்டுமல்ல, தமிழ் வழியில் பாடும் புலவருமாவார். தமிழ் இனத்தின் வரலாற்றிற்கும், நாகரிகத்திற்கும் மாறுபட்ட கதைகளையும், கலைகளையும் மறுத்துப் பாடிய முதற் புலவர்" அவரேயாவர். எனவே இவரைத் 'தமிழினத்தின் தன்மானக் காவலர்' என்றால் முற்றும் பொருந்தும்."

இவ்வாறு தமிழரசு கழகத்தலைவர், சிவஞானம் அவர்கள் 28-7-1946ல் வெளியிடப்பட்ட 'கவிஞர் மலரில்' 'தன்மானக்காவலர்' என்னும் தலைப்பில் கவிஞரையும் அவரது பாடல்களையும் பாராட்டி எழுதியிருக்கிறார்.

இன்று தமிழரசுக் கழகக் கொள்கையைத் தாங்கி வெளிவருவதும், தோழர் நாகராசனை ஆசிரியராகக் கொண்டதுமான "சாட்டை" ஏடு 4—12—'55 இதழில் "பரிதாபத்திற்குரிய பாரதிதாசன்" என்று எழுதுகிறது.

46-ம் ஆண்டு கவிஞரைப் பாராட்டிய போது இந்த ஏடு இல்லை! அதைத்தான் நாம் துவக்கத்திலேயே குறித்தோம், 'நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த முட்டைக் காளான்' இது என்று.

இவ்வளவு எழுதுகிற அந்த ஏடு அந்த கட்டுரையை எழுதியவரின் பெயரைப் போடாமல் "திருட்டு" வேலை செய்திருக்கிறது, அந்தோ! பரிதாபம்!

மயிலின் ஆட்டத்தை வான்கோழி, குறை கூறுகிறது! நான் சொல்வது சரிதான் என்றும் சவால் விடுகிறது!

தனித் தமிழ்க் கவிஞர் பாரதிதாசனை, இதனுடைய தலைவர் தன்மானக் காவலர் என்று பாராட்டியுள்ளார். இன்று வந்த ஏடு பாரதிதாசன் கவிதைகளின் அருமை பெருமைகளைத் தெரிந்து கொள்ளாமல் அவரைக் குறை கூறுகிறது!

நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த முட்டைக்காளான் இது!

சிறு காற்றடித்தாலும் சிதறி விழும் சின்னக்காளான் இது!!

—ந. சோ. சு.

"நேரு பண்டிதரின் 'கப்சிப்' தர்பாருக்கும் பெப்பே !"

முதல் பக்கத் தொடர்ச்சி

டுப்!—"கை தூக்காதீர்" என்றால் கையைத் தூக்காதது மட்டுமல்ல 'கையைக் கட்டிக் கொண்டு.. வாய்மேல் கைபொத்தி' "கப்சிப்" என்று உட்கார்ந்திருக்க வேண்டும்.

அவைத் தலைவர் அனந்த சயனம் கூறினார் "நான் வாத்தியார் அல்ல! வருபவர் வராதவரைக் குறித்து வைக்க" என்று!

அவைத் தலைவர் அனந்த சயனம் வாத்தியாரோ இல்லை போ. ஆனால் நேரு பண்டிதர் தன் கட்சி உறுப்பினர்களுக்கு வாத்தியாராகத்தான் இருக்கிறார்.

"Hands up!" என்றால் ஓட்டுப் போட்ட கையைத் தூக்க வேண்டும்!

"Hands Down!" என்றால் ஓட்டுப் போடக் கூடாது!

பண்டிதரையாவின் மிக மிகக் கண்டிப்பான உத்தரவு.

"கோரம்" ஏன் இல்லை சபையில் என்றால் இது ஒரு காரணம், கையைத் தூக்கி, கையைத் தூக்கி அலுத்துப்போன காங்கிரஸ் உறுப்பினர்கள், விவாத நேரங்களில், "நமக்கு இங்கு ஒன்றும் இப்போது வேலையில்லை, கையைத் தூக்கும் நேரம் வருவதற்கு இன்னும் பல மணி நேரங்கள் உள்ளன. ஆகவே "நாம் சூடாக பூரி உருளைக்கிழங்கு" சாப்பிட்டு வரலாம். அதற்குள் கையைத் தூக்கும் நேரமும் வந்து விடும்" என நினைத்து பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் காண்டீனை (Canteen) நோக்கி விரைவர்.

சபையில் சர்க்காரின் ஊழல்களைக் கண்டித்துக் கண்டித்துத் தொண்டை கம்மும் எதிர் கட்சித் தோழர்களில் சிலரும் "தொண்டையை நனைக்க" வெளியேறுவர்.

இதற்கென்றே காத்திருக்கின்ற உறுப்பினர்கள் உடன் எழுந்து "ஐயையோ கோரம்! கோரம்!" என முழங்குவர். சபாநாயகர் கோரம் கோரி மணி அடிக்கக் கூறுவார். உடனே உறுப்பினர்கள் கையைக் கழுவியபடியும், வாயைத் துடைத்தபடியும் உள்ளே நுழைவர்.

இதைப் போன்று மாநிலங்களின் சட்ட சபையில் அல்ல, மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த மத்திய சட்ட சபையில்—டில்லிப் பாராளு மன்றத்தில்—தலைசிறந்த பார்லி மெண்டேரியன் எனப் புகழப்படும் பண்டிதர் போன்ற விவேகிகள் வீற்றிருக்கும் "லோக சபையில்" "கோரம்"இல்லாக் குறை—ஒரு தடவை-இருதடவை அல்ல, பன்முறை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நேருவும் ஓர் காரணம் என்பதற்கு நாம் மேற்குறிப்பிட்டவைகளே போதுமானவை.

காங்கிரஸ் உறுப்பினர்களால் தான் "கோரம்" குறைகிறது என்பதற்கு மற்றோர் சான்று. இதுவரை, "கோரம்" கோரி சபையில் கேள்வி கேட்டு வந்தது; எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் கூட "ஐயா சபா நாயகரே! சபையில் "கோரமில்லையே! கவனித்திரா" என்று எடுத்துக் கூறவில்லை.

இதற்கு மேலும் ஒரு சான்று வேண்டுமெனில் "பூரி மசாலா" சாப்பிடப்போன உறுப்பினர்களோடு சில "குட்டி மந்திரிகளும்" சென்றிருந்தனராம். பத்திரிகைச் செய்தி கூறுகிறது!

இப்படி "கையைத் தூக்கு" என்றால் தூக்குவதும், "கீழே போடு" என்றால் கீழேபோடுவதுமான நிலையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருப்பதற்குக்காரணம். "நாம் நேருவின் பேச்சைக் கேட்காவிடில் அடுத்து வரும் தேர்தலில் நமக்கு ஒரு "பருக்கை" கூடக் கிடைக்காது" என்ற பயமும், "நேரு பண்டிதருடைய பேச்சுக்கா எதிர்ப்பு" கூடாது! கூடாது என்ற பக்தியும்தான் காரணம்!

இந்த அளவுக்கு பண்டித நேரு அவர்கள் — தன் கட்சி உறுப்பினர்களுக்கு மிக மிகச் சாமார்த்தியமாக வாயைப் பூட்டிவைத்திருக்கிறார்!

எனவேதான் "ஓட்டுப்போடும் போது நாமிருந்தால் போதும், இப்போது நமக்கு வேலையில்லை" என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் சில குட்டி மந்திரிகளைக் கூட அழைத்துக் கொண்டு ஓடி விடுகின்றனர். "கோரம்" தரும் அரசியல் சாரம் இதுதான்!

இப்படி பண்டிதராலும் பாராளு மன்றத்தில் தான் "கோரம்" இல்லை என்றாலும் அவரது அரசியல் கொள்கைகளுக்கும் "கோரம்" இல்லை!

முன்பு நேரு பண்டிதர் "குரல் கொடுத்தால்" "ஆமாம்! ஆமாம்"! என்று கூடக் குரல் கொடுத்த—மிகமிகத் தீவிரமான காங்கிரஸ்காரர்கள் இப்போது "ஏன்? எதற்கு?" என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்! பாவம்? அவர்களும் எத்தனை நாளைக்கு கொலுப் பொம்மைகளாக இருப்பார்கள்? அவர்களுக்கும் உணர்ச்சி இல்லையா என்ன?

மாநில புனரமைப்புக்குழுவினரின் அறிக்கைகளும்அதையொட்டி. காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானங்களும் — அதையெதிர்த்தே சில தீவிர காங்கிரஸ்காரர்கள்—மகாராஷ்டிரம்—பஞ்சாப்—விந்திய பிரதேசம்போன்ற இடங்களில் இருந்து கொண்டு, நேருவின் குரலுக்கு, எதிர் குரல் கொடுத்து வருவதை நாட்டினர் அறிவர்.

காங்கிரஸ் தீர்மானத்தை எதிர்த்து ஆங்காங்கே கிளர்ச்சிகள் — காங்கிரஸ்காரராலேயே நடத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் பம்பாயில் நடைபெற்ற "மாபெரும் படுகொலை" ஒன்று இதனை இன்னும் விரிவுபடுத்தி விளங்க வைக்கிறது!

வடக்கு முழுமையும் நேருவுக்கு "ஏன்? எதற்கு?" என்ற குரல் கொடுக்கும் நிலை மிக மிக வேகமாகப் பரவி வருகின்றது.

தென்னகத்தில் கூட இந்தப் பிரச்னை புகைந்து கொண்டிருக்கிறது! ஆனால் இங்கு நின்று நிலவுகிற "அரசியல் நாகரீகம்" அந்தப் புகைச்சலை ஓரளவுக்குத் தடுத்து வருகின்றது!

நேரு பண்டிதரின் பேச்சுக்கு வேறு பேச்சு இல்லை என்ற நிலை மாறுபட்டு விட்டது! அவருக்கும் "ஏன்? எதற்கு?" என்ற கேள்விகள் பிறக்கின்றன.

இதை நாம் முன்னரே மறைமுகமாகக் கூறி வந்தோம். "நேருவுக்குப் பின்னர் யார்? என்று. ஆனால் இன்றே அவர்காலத்திலேயே—அவரைக் கேள்விகேட்க ஆரம்பித்து விட்டனர்.

நேருவுக்குப் பின்னால் யாருடைய கை ஓங்கும் என்ற நிலைக்கு யாருடைய கேள்விக்கும் நேரு பதில் சொல்லித் தீரவேண்டும் என்ற இன்றைய நிலை ஒரு அடையாளமாகத் திகழ்கிறது.

பன்முறை நாம் பண்டிதருக்கு எடுத்துக் கூறி வருவதெல்லாம் அதிகாரத்தைக் குவித்துவைத்துக் கொண்டு ஆடம்பர ஆட்சி நடாத்துவதைக் காட்டிலும், அனைவருக்கும் சம உரிமை அளித்து, அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, குறிப்பிட்ட விவகாரத்தியல் மட்டும் கூட்டாக இருந்து, ஜனநாயக முறையில் ஆட்சி நடாத்தினால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. என்பதுதான்.

இதை நேரு பண்டிதர் தன் காலத்திலேயே செய்தாரானால் உண்மை ஜனநாயகத்தை வளர்க்கும் ஒரு பெரிய சேவை செய்தவராவர்.

இப்போது கொலுமண்டபத்தில் உள்ள "கோரம்" அகோரமாவதற்கு முன்னர், நேரு பண்டிதர் இதைச் செய்து முடித்திடல் வேண்டும்! செய்வாரா?

●

தென் பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன்

பொன்மலை (பதிவு எண் 1647)

சச்சிதானந்தம் ஐந்து ஆண்டுகளுக்கு விலக்கப்பட்டார்

ஆளவந்தார் மீது ஒழுங்கு நடவடிக்கை

பரமசிவம் கூட்டுப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

●

விழுப்புரத்தில் 4—12—55ல் மத்திய சங்கத் தலைவர் தோழர். இராகவானந்தம் அவர்கள் தலைமையில் மத்திய நிர்வாகக் குழு கூடிற்று. அப்பொழுது கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் கடிதத்தில் கண்டுள்ள குற்றச் சாட்டுகள் நியாயமானது என்று ஒத்துக் கொண்டு, அவரது விலகலை பற்றி பரிசிலப்பதை பொதுக்குழு கூட்டம்வரை தள்ளிப் போடுவது என்று முடிவு செய்கிறது.

கூட்டுப் பொதுச் செயலாளர் மீது பத்து குற்றங்கள் சாட்டி, அதற்காக அவரை ஐந்து ஆண்டுகள் விலக்கப்பட்டதுடன் தோழர். பரமசிவம் கூட்டுப் பொதுச் செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொன்மலை, திருச்சி, பெரம்பூர் கிளைகளின் மீது ஐந்து குற்றங்கள் சாட்டி, ஏன் கலைக்கப்படக் கூடாதென சமாதானம் கேட்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தோழர் ஆளவந்தார் மீது இரண்டு குற்றங்கள் சாட்டி-ஏன் ஐந்து ஆண்டுகள் விலக்கப் படக்கூடாது என்று சமாதானம் கேட்பது என்று முடிவு செய்யப்பட்டது.

"முரசு" இதழை ஜனவரியிலிருந்து வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:—

தோழர் இராகவானந்தம், மத்திய சங்கத் தலைவர்

கடலூர் கிளை :— தலைவர் இலக்குமணன், செயலாளர் N. S. கண்ணன் உறுப்பினர் அரங்கநாதன்.

விழுப்புரம் கிளை: தலைவர் வாசுதேவன், செய. பக்தவச்சலம், உறு. கண்ணன்

விருத்தாசலம் கிளை :— தலைவர் ஐசையா, செய. பலராமா

சேலம் கிளை :— தலைவர் தங்கராசு செய. வீராசாமி உறு. இராமசாமி.

திருவண்ணாமலை கிளை :— தலைவர் தட்சணாமூர்த்தி செய. குப்புசாமி உறு. இராமலிங்கம்

செங்கல்பட்டு கிளை :— தலைவர் இராமச்சந்திரன், செய. வியோ ஜோசப் உறு. நடராசன்.

சென்னைக் கிளை :— தலைவர் நல்லப்பன், செய. சாமிநாதன், உறு. சாலியா உசேன்.

பெரம்பூர் கிளை :— செய. முருகவேள்
மாயவரம் கிளை :— செய. இராசு
விருதுநகர் கிளை :— செய. பிரகாசம், உறு. கருப்பையா
திருவாரூர் கிளை :— செய. ஆறுமுகம்
மதுரைக் கிளை :— தலைவர் நடராசன். உறு: வெங்கடாசலம்
வாலுகுடி கிளை :— தலைவர் சிவப்பிரகாசம
திருச்சிக் கிளை .— தலைவர் பரமசிவம்

நிர்வாகக் குழுவின் முடிவிற்கு கட்டுப்படுவதாக மத்திய சங்க உதவி செயலாளர் தோழர் வாசுதேவன் அவர்களிடமிருந்தும், வாலுகுடி செயலாளர் தோழர் கலியாண சுந்தரம், உறுப்பினர் குஞ்சிதபாதம் அவர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன.

விழுப்புரத்தில் எடுக்கும் முடிவுக்கு ஆதரவு தருவதாக யூனியனில் இப்பொழுது உறுப்பினராயில்லாத நூற்றுக்கு மேற்பட்ட பெரம்பூர் தோழர்கள் கையெழுத்திட்டு கடிதமெழுதியிருந்தார்கள். முன்னாள் பெரம்பூர் செயலாளர் கமலநாதனும் ஆதரித்து கடிதமெழுதி இருந்தார். பெரம்பூர் கிளையின் முன்னாள் தலைவர் தோழர் இராசரத்தினம், தோழர்கள் இராமச்சந்திரன், ரிச்சர்ட் போன்றவர்கள் கூட்டத்திற்கு வந்து, பெரம்பூரை S. R. M. U. வின் கோட்டையாக்கித் தருவதாக உறுதியளித்தனர்.

திராவிட மாணவர்களுக்கு வேண்டுகோள்

●

திராவிட மாணவர்களே!

அண்மையில் சென்னையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2வது மாநில மாநாடு உங்கள் ஆர்வத்திற்கும், ஆற்றலுக்கும் இலக்கியம் சமைத்துவிட்டது. திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு உங்கள் உற்சாகத்தையும் உணர்வையும் பாராட்டுகிறது—வாழ்த்துகிறது.

சென்னை மாநாட்டில் நாம் தீர்மானித்ததற்கிணங்க திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் நாடெங்கும் தழைத்திட பணி புரிய வேண்டிய மகத்தான பொறுப்பு உங்கள் முன்னே உள்ளது.

1. எங்கெங்கு மாணவர் கழகக் கிளைகள் இல்லையோ, அங்கெல்லாம் உடனே நிறுவுங்கள்.

2 திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளை ஒவ்வொன்றிற்கும் குறைந்தது 25 உறுப்பினர்களாவது இருக்கவேண்டும்.

3. அதிலிருந்து ஒரு செயலாளர் ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர், ஐந்து பேருக்குக் குறையாத செயற்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

4. தனியாக இயங்கமுடியாத நிலையுள்ள இடங்களில், பக்கத்துக் கிளையில் சேர்ந்து கொள்ளலாம். வசதிக்காகப் பல கல்வி நிலையங்கள் ஒரே கழகமாகவும் அமையலாம்—(உதாரணமாக, 2 கல்லூரிகள் 4 உயர்நிலைப் பள்ளிகள் உள்ள ஒரு நகரில் எல்லாம் சேர்ந்து ஒரே கிளையாகவும் அமைக்கலாம்; அல்லது தனித் தனியாக இயங்கமுடியாத உறுப்பினர்கள் உள்ள இடங்கள், பக்கத்துக் கிளையின் அங்கமாக அமையலாம்—மேற்கூறிய முறையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் விரைவில் நிறுவப்பட வேண்டும்.

5. ஏற்கனவே கழகங்கள் நிறுவப்பட்டுள்ள கிளைகளின் செயலாளர்கள், தங்கள் கிளையின் துணைச்செயலாளர் பொருளாளர், செயற்குழு உறுப்பினர் மற்ற விபரங்களையும், தலைமை நிலையத்திற்குத் தெரியப்படுத்திப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

6. புதிய கிளைகள் அமையப்போகும் கிளை அமைப்பு பற்றிய சேதியை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்கும், செய்தித் தாள்களுக்கும் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

ஜனவரி முதல் வாரத்தில் திருச்சியில் அல்லது அண்ணாமலை நகரில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு கூடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அமைப்புக் குழு, உறுப்பினர் சேர்க்கும் முறை, கழக சட்ட திட்டம், மாவட்டக் கழகம் ஆகியவை குறித்து முடிவுகள் எடுக்கும். அதற்குள் பல இடங்களிலும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகளை நிறுவுங்கள்—என்று, அமைப்புக் குழுவின் சார்பில் ஆர்வம் படைத்த எல்லா திராவிட மாணவர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தலைமை நிலையம்,
'அறிவகம்'
ராயபுரம்.
சென்னை.

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

திருச்சி புயல் கொடுமை குறித்து
அம்பில் தர்மலிங்கம் அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயலாளர், தோழர் அன்பில் தர்மலிங்கம் கீழ்க்கண்ட அறிக்கை விடுக்கிறார்.

30-11-55-ம் தேதியன்று திடீரென வீசிய புயலால் பாதிக்கப்பட்ட திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை பகுதி மக்களுக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4-12-55ம்தேதியன்று புயலால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை நகரப் பகுதியையும், ஆலங்குடி, கரம்பக்குடி பகுதிகளையும் யானும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர் திரு. வி. ராமய்யா, மாவட்டமன்ற துணைத் தலைவர் திரு. வி. ஏ. முத்தையா திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி செயலாளர் டாக்டர் வி. சுப்பிரமணியம் அவர்களும் பார்வையிட்டோம்.

புயலால் பாதிக்கப்பட்டு வீடு இழந்து, உணவின்றி வாடும் மக்கள் படும் அவதியைப்பார்க்க சகிக்கவில்லை. உள்ளூர் பிரமுகர்களும், திருச்சிமாவட்ட கலெக்டர் திரு ஆர். எஸ். மலையப்பன் அவர்களும் செய்து வரும் உதவி போற்றக் கூடியது. கலெக்டர் அவர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் சென்று உடனடியாக நிவாரணம் அளிப்பது, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரிதும் ஆறுதல் அளித்து வருகிறது. இருந்தாலும் சர்க்கார் உடனடியாகத் தலையிட்டு, வீடிழந்து தவிக்கும் மக்களுக்கு, வீடு கட்டிக் கொடுக்கவும், உணவின்றிவாடும் ஏழைகளுக்கு உணவு அளிக்கவும், நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் வீடிழந்துவாடும் ஏழை அரிஜனங்களுக்கும் மற்ற ஏழை பிற்பட்ட மக்களுக்கும், சர்க்கார் தற்சமயம் வீடு கட்டிக்கொள்ள உதவும் சிறு தொகையோடு மற்றுமொரு சிறு தொகையைக் கடனாகக் கொடுத்தும் உதவி, நல்லமுறையில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள உதவவேண்டும்.

மிகத் தாழ்த்தப்பட்ட ஜனங்களுக்கு வீடு கட்ட கடன் கொடுப்பதாக உத்திரவிருந்தும் இதுவரை கடன் பட்டுவாடா செய்யவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு கடன் பெறத்தக்க ஜாமீன் கொடுக்க இயலவில்லை, என்பதேயாகும் என்று சொல்கிறார்கள். சர்க்கார் உடனடியாக ஜாமீன் கொடுக்க இயலாத அரிஜன மக்களுக்கு. அவர்கள் வீடுகட்டும் மனையையும் கட்டப்படுகிற வீட்டையும், ஜாமீனாக வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கடன் உதவி அளிக்க வேண்டும். தக்க காலத்தில் இந்தப் பேருதவியை செய்தால் சர்க்கார் அரிஜன முன்னேற்றத்திற்காக செய்கிறோம் என்று சொல்லும் உதவிகளில் தலையாய உதவியாக இருக்கும். தற்சமயம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகச் சார்பில் எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பில் தர்மலிங்கம்

*

புதுக்கோட்டை பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம், தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி செயலாளர் ராமய்யா மாவட்ட மன்ற துணைதலைவர்முத்தய்யா டாக்டர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் 4-12-55-ம்நாள் காலை புதுக்கோட்டை நகரப்பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்கள். பிற்பகல் 2-மணிக்கு மாவட்ட மன்ற துணைத் தலைவர் திரு. வி. ஏ. முத்தையா அவர்களும் மாவட்ட மன்ற உறுப்பினரும் தி. மு. க. செயலாளருமான அன்பில் தர்மலிங்கம் அவர்களும் ஆலங்குடி, கரம்பக்குடி மற்றும் சுற்றுவட்டார கிராமப்பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பார்த்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்ததோடு, வீடிழந்த மக்கள் அனைவரையும், மாவட்ட மன்றத்திற்குச் சொந்தமான உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி மற்றும் உள்ள கட்டிடங்கள் தங்குவதற்கும் அனுமதியளித்து ஆவன செய்து வந்தார்கள்.

மதுரை குறித்து மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்
எஸ். முத்து அறிக்கை

சமீபத்தில் ஏற்பட்ட புயல் மழையின் காரணமாக மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சர்க்கார் உதவி செய்ய காலதாமதமில்லாமல் உடனடியாகச் செய்து உதவ வேண்டுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் ஆங்காங்கு புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் இயன்ற அளவு உதவி செய்வதோடு பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று விபரம் சேகரித்து மதுரைமாவட்ட தி. மு. கழகத்திற்கு செய்தி அனுப்பவேண்டுகிறேன். வணக்கம்

எஸ். முத்து.

மதுரை மாவட்ட தி. மு கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

15-12-55-ல் திலக்கோட்டையில் மாவட்டக் கழகக் கூட்டம் நடக்க இருக்கிறது. அதற்குள் மாநிலமாநாட்டு நிதிக்காக இதுவரையிலும் கொடுக்காதிருக்கிற கிளைக் கழகங்கள், உடனே தங்கள் ஈவுத்தொகையை அனுப்பி வைப்பதோடு புதிய அங்கத்தினர்கள் சேர்க்கும் பாரத்தையும்பெற்றுக்ககாள்ள வேண்டுகிறேன்;

மாவட்ட நிதி அனுப்பாத கிளைக் கழகங்களுக்கு அங்கத்தினர் சேர்க்கும் பாரம் அனுப்பப்படமாட்டாது. என்பதை தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

எஸ். முத்து.
செயலாளர்.

●

வ. ஆ. தி மு. க. (கிளை) செயலாளர்களுக்கு

"இதுவரையில் மாநில மாநாட்டின் நிதிப் பங்கை அனுப்பாத கிளைக் கழகச் செயலாளர்கள் 10-12-55ல் காங்கேயநல்லூரிலும், 11-ல் வாணியம்பாடியிலும், நடைபெறுகின்ற நிதியளிப்புக் கூட்டங்களில் தங்கள் தங்கள் கழகத்தின் பங்கைச் செலுத்த வேண்டுகிறேன். செயலாளர்கள் தயை செய்து உடனடியாக நிதி வசூலில் ஈடுபட்டு நம் மாவட்டத்தின் பங்கீட்டுத் தொகையைப் பூர்த்தி செய்து உதவ வேண்டுகிறேன்" என்று, வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளர் தோழர் முல்லை சத்தி கேட்டுக் கொள்கிறார்.

ருக்குமணி கணபதி

27-11-55 ஞாயிறு காலை 7-மணிக்கு மாயூரம், வியாபாரி செட்டித் தெருவில் தோழர் எம் கணபதி தோழியர் கோ. ருக்குமணி ஆகியோருக்கு தோழர் வி. சங்கையன் தலைமையில் திருந்திய திருமணம் நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்த திருமணத்தின் அவசியம் பற்றியும் தோழர்கள் ஆர். கணேசன் எம். சி. எஸ். கருணாநந்தம், என். கிட்டப்பா, என். எஸ். இளங்கோ, ஆகியோர் பேசினார்கள்.

இதன் நினைவாக "திராவிடன்" வளர்ச்சிக்கு ரூ 1. அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம். நன்றி நிர்வாகி.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண் சங்கு சியக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு
தஞ்சாவூர்

தேவிகுளம் - பீர்மேடு பகுதிகளை சென்னை மாநிலத்தில் இணைக்கவும்

'தமிழகம்' அல்லது 'தமிழ்நாடு' எனப் பெயரிடுக

பம்பாய் தி. மு. க. பொதுக்குழு முடிவுகள்

பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழு கூட்டம் 27—11—55 ஞாயிறு காலை 11-30 மணியளவில் சயன் தோழர். அன்புச்செழியன் அவர்கள் இல்லத்தில் பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்கள் தலைமையில் கூடியது.

பொதுக் குழுவில், தாராவி கிளைச் செயலாளர் சி. த. மு இர. ஆரியசங்காரன், மாதுங்கா கிளைச் செயலாளர் தோ. து. அன்புசெழியன், அந்தேரி கிளைச் செயலாளர் எல். எம். பாண்டியன், மான்கூர்டு கிளைச்செயலாளர் ப. செல்வராசன், கொலபா கிளைச் செயலாளர் எஸ். கே. இராசு, பிரதிநிதிகள் பி. எஸ். செல்லையா, மா. இரா. குறள்தாசன், எ. எல். பெருமாள், இ. சு. ச. பிச்சையா எஸ். முத்து, இரா. தஞ்சை துரை, வி. இராமு, த. மு. பொற்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமை குறித்து வருந்தியும் எடுக்கும் முடிவுகளை ஆதரிப்பதாகவும், கழகத் துணைச் செயலாளர் யோ. தர்மராசன் தாணு கிளைச் செயலாளர் எம். இராசகோபாலன் ஆகியோர் முடங்கல்தீட்டியிருந்தனர். கடந்த கூட்ட நிகழ்ச்சி, கடிதப் போக்கு வரத்துகள் வரவு செலவு கணக்குகளைத்தும் தோழர் த. மு. பொற்கோ அவர்களால் படித்துக் காண்பிக்கப்பட்டன.

பம்பாய் தி. மு கழகத் தலைமை நிலையத்திற்கு டணியை அமைப்பதற்கு நன்கொடை பிரிக்க புத்தகம் பெற்றுச் சென்றவர்கள் உடனடியாக அதற்குரிய தொகையை வசூலித்துச் செலுத்தி விடுமாறு முடிவெடுக்கப்பட்டது. கட்டணபாக்கி வைத்திருக்கும் கிளைக்கழகங்கள் திங்கள் தோறும் செலுத்தியுதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. 1955 ஜனவரியிலிருந்து அக்டோபர் முடியவுள்ள கிளைக்கழக வரவு செலவு கணக்குகளின் தணிக்கை அறிக்கையை அடுத்த பொதுக் குழுவில் சமர்ப்பிப்பதாக முடிவாகியது; பாண்டுப் கிளைத் தணிக்கை அறிக்கையை படித்துக் காண்பிக் கப்பட்டது.

கழகப் பணி புரிவதற்கு வாய்ப்பில்லாத அளவிற்கு பணித்தன்மையுள்ளமையாலும் தொலை பகுதியிலிருப்பமையாலும். துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள விரும்புவதாக தோழர் யோ. தர்மராசன் அவர்கள் கொடுத்த விலகல் கடிதம் ஆய்வுக் கெடுத்துக் கொள்ளப்பட்டு தேர்தலுக்கு இன்னும் ஓரிரு திங்களேயுள்ளமையால் தொடர்ந்து பொறுப்பு வகித்துவரக் கேட்டுக் கொள்ளப்பட்டது. பொதுச் செயலாளர் தியாகராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் தலைமை நிலைய கையெழுத்து வெளியீடான 'சிந்தனை' யின் நிர்வாகியாக இரா. ம. சண்முகராசன், பம்பாய் வெளியீட்டாசிரியராக த. மு. பொற்கோ, ஆமதாபாத் வெளியீட்டாசிரியராக இரா. வளர்மதி ஆகியோரைப் பொதுச் செயலாளர் நியமித்ததை பொதுக் குழு அங்கீகரித்தது.

கவிஞர் கண்ணதாசன், பம்பாய் வருகை பற்றிய கடிதம் படித்துக் காண்பிக்கப்பட்டது. எல்லோருடைய கருத்தையும் அறிந்து கீழ்க்கண்டவாறு நிகழ்ச்சி அமைக்கப் பட்டது.

27-12-55	செவ்வாய்	கோரோன்
28-12-55	புதன்	கொலபா
29-12-55	வியாழன்	அந்தேரி
30-12-55	வெள்ளி	தாராவி
1-1-56	ஞாயிறு	மாதுங்கா

பொதுக் கூட்டங்கள் நடத்தவிருக்கும் கிளைகள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை 18-12-55ம் நாளுக்குள் பொதுச் செயலாளரிடம் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் மேற்குறித்த நாளுக்குள் பங்குத் தொகை செலுத்தாத கிளைக்குப் பேச்சாளரை அனுப்பிக் கொடுக்கப் படமாட்டாதெனவும் முடிவாகியது.

பரிவுத் தீர்மானங்கள்:-

திருச்சி செயிண்ட் சோசப் கல்லூரிப் பேராசிரியரும் திராவிட இன நலத்தில் நாட்ட மிக்கவருமான திரு. இருதயராஜ அவர்களின் திடீர் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் அவர்தம் துணைவியாருக்கும், உறவினர்க்கும், மாணவர்கட்கும் இக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது

காந்தவல்லி தி.மு.க. முன்னாள் செயலாளர் தோழர் து. சே. அருணாசலம் அவர்களின் செல்வன் சேரன் இயற்கை யெய்தியமை குறித்து வருந்துவதோடு அன்னாருக்கு இப்பொதுக் குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

மாநிலச் சீரமைப்பு:-

அண்மையில் வெளியான மாநிலச் சீரமைப்புக் குழுவின் அறிக்கை குறித்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் அறிக்கைக்கிணங்க ஆவனச் செய்யுமாறு மத்திய அரசியலாரை இப்பொதுக்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தேவிகுளம் பீர்மேடு——சித்தூர்—நெய்யாற்றங்கரை ஆகிய பகுதிகளை முறையாகத் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டுமென்பதுடன், சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றி தமிழகம் அல்லது தமிழ் நாடு எனப் பெயரிடுமாறு இப்பொதுக் குழு அரசியலாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற நேர்மையான கோரிக்கையை இப்பொதுக் குழு வரவேற்பதுடன் அதற்காவன செய்ய மத்திய அரசியலாரை இப்பொதுக் குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. வேறு பல முடிவுகளும் மேற் கொள்ளப்பட்ட பின்னர் தலைவர் முடிவுரையில் கழகப் பணிகள் குறித்தும்— நாம் ஆற்ற வேண்டிய செயல் முறைகள் குறித்தும் பேசி அனைவருக்கும் நன்றி கூறினார்கள் கூட்டம் இனிது முடிவுற்றது.

*

தாராவி கிளை

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக, தாராவி கிளை செயற் குழுக் கூட்டம் 24-11-55 இரவு 7-30 மணிக்கு திராவிடரகத்தில் தோழர் பி. எஸ் செல்லையா அவர்கள் தலைமையில் கூடியது. நடந்தக் கூட்ட நிகழ்ச்சி, கழக போக்கு வரத்துக்கள் படித்துக்காண்பிக்கப் பட்டு குழு உறுப்பினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. புரட்சிப் பெண் நாடகம், "முயற்சி" சிறப்பு மலர் பாக்கிகளைச் செலுத்தாதத் தோழர்கள் 12-12-55-க்குள் கட்டாயம் செலுத்தி விட வேண்டுமென்றும், கவிஞர் கண்ணதான் அவர்கள் பம்பாய் வருகையின் போது பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப் பட்டது.

இலங்கைத் தோழரின் கடிதம்

வேண்டாம் வேதனைச் சொல்!

பறை ஜாதி தமிழர்களுக்கு நாம் இடங்கொடுப்பதா? அவர்களுக்கு நாம் இடம் கொடுத்தால், இருந்த இடம் தெரியாமல் எமது சமுதாயம் அழிந்து விடுமே! நாலுகோடித் தமிழர்களைக் கொல்லும் பாபம், ஒரு சிங்களவனை கொல்லும் பாபத்திற்கு ஈடாகாது என்று. தமிழர்களை இழித்துரைத் திருக்கிறார் ஒருவர். அவர் யாரென்று கருதுகின்றீர்கள்! பிற உயிர்களுக்கு உள்ளத்தினாலோ, மனத்தினாலோ, சிறிதளவேனும் தீங்கிழைத்தல் தகாதென்று புத்தன் மலர்ந்தருளிய பொன்மொழிகளையும், அவனுடைய பஞ்சசீல கொள்கைகளையும் கொலை, களவு, பாபம் ஆகிய தீயச் செய்கைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றி, அன்பு, அறம், பண்பு ஆகியவற்றை இனத்தின் அடிப்படையிலோ, மொழியின் அடிப்படையிலோ, பாகுபாடின்றி மக்களிடையே பிரச்சாரம் செய்து மக்களின் வாழ்க்கை நெறி செழித்தோங்க பணிபுரிவதே தமது கடமை யென்பதையும் மறந்து, இலங்கையிலே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள மொழி வெறியினால் உந்தப்பட்டு தமிழர் சிங்களவரிடையே நிலவும் ஒற்றுமையை சீர் குலைக்கும் வகுப்புவாத பேச்சுகளையும், கலவரங்களையும், தூண்டும் பௌத்த பிக்குகளின் ஒருவரான, சீலவன்சதேரோ என்ற பௌத்த பிக்குவே மேற்கண்ட நிகழ்ச்சிக்கு காரண கர்த்தா.

அவர், கண்டியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், தமிழர்மேல் தகாத சொல்லம்புகளை தொடுத்திருக்கின்றார்! இதற்கு அவர் கூறும் காரணம், சிங்கள இனம், அதனுடைய மொழி, கலை, பண்பாடு, புத்த தர்மம் ஆகிய அனைத்தும் தமிழர்களினால் அழிந்து விடுமாம்! தமிழர்களினால் பிற இனங்களோ, அதனுடைய உடமைகளோ அழிக்கப்பட்டு இருக்கின்றது என்பதற்கு சரித்திர காலந்தொட்டு இன்றுவரைக்கும் அவர் ஒரு சான்றுவது காட்ட முடியுமா! என்று அறைகூவல் விடுக்கிறேன்.

சிங்களவர்கள் புத்த நெறியைக் கடைப் பிடிப்பதற்கு முன்னதாகவே, புத்தநெறியைக் கடைப்பிடித்து அரசோச்சிய மன்னர்கள் தமிழர்கள்.

மணிமேகலை, நாலடியார், சீவக சிந்தாமணி இவைபோன்ற ஏனைய தமிழ்க் காவியங்களின் மூலம், புத்த நெறியைப் பரப்பியவர்கள் தமிழர்கள் பிற இனங்களையும், தன் இனம்போல் கருதி நடப்பவர்கள் தமிழர்கள் இத்தகைய பண்புள்ளம் படைத்த தமிழர்களினால் சிங்கள இனத்தின் உரிமைகள் அழிக்கப்படுமென்று கூறுவது தவறான கருத்தாகும்.

எனவே சிங்கள மக்களுடைய மொழியைப் பேணி வளர்ப்பதற்கு எவ்வித உரிமை இருக்கின்றதோ, அதேபோன்று தமிழர்களிடத்தில் இருந்த உடமைகளெல்லாம் பறிக்கப்பட்டு, இன்று தமிழர் தம்மை தமிழரென்று கூறிக்கொள்வதற்கு அவர்களிடத்தில் எஞ்சியுள்ள ஒரே ஒரு பொருள் தமிழ்மொழி ஒன்றுதான். அந்தத் தமிழ்மொழியை பேணி வளர்ப்பதற்குரிய உரிமைகளையும் அழிக்க, பௌத்த பிக்குகளோ அன்றி சிங்களவர்களோ முனைவார்களேயானால், அச்செய்கையானது பல விபரீதங்களையும் பல நச்சரவுகளையும் உருவாக்கிவிடு மென்பதை, பௌத்த பிக்குகளுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

இன்று, மற்ற இனங்களிடம் காட்டும் இழிவுத்தன்மையும், பகையும், அவர்களிடம் பலிக்காது போனால் மறு தினம் அது திரும்பிவந்து தம்மினத்தவரிடையே செலுத்தத் தூண்டும். இறுதியில் தம் இனத்தையே வெறுக்கவும், பகைத்துக்கொள்ளவும் ஏற்படு மென்பதை, பௌத்த பிக்குவிற்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே, தற்காப்பு பண்புகளாகிய அன்பையும், அறத்தையும் தன்னகத்தே கொண்டும், தன்னழிவு தன்மையை யுண்டாக்கும் செயல்களை அகத்திலிருந்து அகற்றிவிட்டு, இலங்கையில் வசிக்கும் சிங்களவர் தமிழர் ஒற்றுமைக்காகவும் சித்தார்த்தரின் சிறந்த வழியில் சென்றும். அவரது கொள்கைகளுக்கும் கலங்க மேற்படாதவாறு பௌத்த பிக்குகள் நடந்து கொள்வார்களாக!

—எஸ். தர்மராசன்,

ஆமதாபாத்

27-11-55-ல் மாலை 4-30 மணிக்கு 1-வது வட்ட தி. மு. கழக செயற்குழு சமால்பூர் கழக இல்லத்தில் ப. பாண்டியன் அவர்கள் துவக்கி வைத்து, செயலாளர் டி. பி. பாலகிருட்டிணன் அவர்களின் தலைமையில் கூடியது; அதுசமயம் நிறைவேறிய தீர்மானங்கள்:—

எ. இருதயராஜ அவர்களின் இயற்கைக்கு வருந்துவதுடன் அவரது பிரிவின்பால் துயர்படும் அவரது குடும்பத்தார்க்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டது.

இவ்வருடம் ஐந்தாவது ஆண்டு விழாவின் போது, நமது தமிழ் நாட்டுத் தலைவர்களுடன், நிர்வாகிகள் உட்பட, எல்லா கிளை கழகங்களும், ஆ. ந. தி. மு க. நிர்வாகிகள்உட்பட (புகைப்படம்) போட்டோ எடுக்க அனுமதி, மாநாட்டு தீர்மானத்தை ஆதரித்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ந. சரவணன் அவர்களின் ஆ. ந. தி. மு. க. வைப்பற்றிய குறிப்புகளை, அவர் இச்செயற் குழுவில் கலந்து கொள்ளாததால் அடுத்து கூடும் செ. குழுவில் ஆய்ந்து முடிவு பெறப்படும்.

பொ. இரத்தின வேலன் அவர்களின் மடலை ஆராய்ந்து முடிவுகாண இந்நகர தி. மு. க, பொதுச் செயலாளர் இரா. தணிகாசலம் அவர்களுக்கு, அதிகாரமளிக்கின்றது.

கணக்குகளைப் பரிசிலனை செய்யப்பட்டு. தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

*

பெங்களூரில் சிறப்புக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு நிதிக்காக பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் சிறப்பு சொற்பொழிவுக் கூட்டம் 27—11—55 மாலை 4-30 மணிக்கு ஸர். கெ, பி. புட்டண்ண செட்டி நகர மண்டபத்தில் நடைபெற்றது. பெங்களூர் மாவட்ட செயலாளர் தோழர். எஸ் வி. பதி அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தோழர்கள் கலஸ சத்தியநாராயணன் B Sc (Hons) B. L. முல்லை சத்தி, போளூர் சுப்பிரமணியம் மதுரை எஸ். முத்து, சிந்தனைச் சிற்பி சிற்றரசு கலைஞர், மு கருணாநிதி ஆகியோர் சுமார் 4-மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

கூட்டத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 920 வசூலாயிற்று. ரூபாய் 500 செலவு போக, மாநில மாநாட்டு நிதிக்காக பெங்களூர் மாவட்டம் செலுத்த வேண்டிய ரூபாய் 400 தோழர் எஸ். வி. பதி அவர்கள் மு. கருணாநிதியவர்களிடம் சேர்ப்பித்தார்; மாவட்டத் துணைச் செயலாளர் மா. மன்னர் நன்றி நவிலக் கூட்டம் 8-30 மணிக்கு முடிவுற்றது.

திராவிடப் பூங்கா

அற்புதங்கள் அறிவோமா?

தமிழ்த் தென்றலாம் திரு. வி. க. அவர்கள் அவரது பெற்றோருக்கு ஆறுவது பிள்ளை. அவரது வலது காலடியின் இறுதியில் ஆறுவது விரல் படைப்பில் அமைந்திருந்தது. விரல்கள் நாலும், ஐந்தும், ஆறும் பிரிவின்றி ஒன்றை ஒன்றுபற்றி ஒருமைப்பட்டிருந்தன.

அவரது பெயர் திரு. வி. கலியாணசுந்தரம். பெயருக்கு முன்னுள்ள 'திரு', பலரை பலவாருக நினைக்கசெய்தது. திரு. வி. க.வின் மூதாதையர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர்கள். ஆகவே "திரு" என்பது திருவாரூரைக் குறிப்பதாயிற்று. "திரு" என்பது மரியாதைச் சொல் 'ஸ்ரீ'யைக் குறிப்பதாகாது என்பதை உணர்த்தும் பொருட்டே அவர் எழுதிய நூல்களின் முகப்பில் "திருவாளர்—திரு. வி. கலியாணசுந்தரனுர்" என்று அவர் தம் பெயரைப் பொறித்துப் போந்தார்.

சிறு வயதில் தேங்காய் குறை எடுக்கப் போய் வலது கை சுட்டுவிரல் நுனியை நசுக்கிக் கொண்டார். பச்சிலையால் புண் ஆறியது. ஆனல் இரண்டு வடுக்கள், கீறல் போல், நின்றன. அவை மறையாது நிலைத்து இரேகை சாஸ்திரிகளை ஏமாற்றின.

அவர் ஒரு "ஓரட்டுக் கையர்". எழுவதுஞ் சாப்பிடுவதுந் தவிர மற்றச் செயல்களை யெல்லாம் அவரது இடது கையே நிகழ்த்தும். சில வேலைகளில் இடது கையே எழுத்துத் தொண்டும் புரியும்.

காந்தியாரைப் போன்றே அவரது கையெழுத்தும் [illegible]. நல்ல கையெழுத்து உடையவர்களைக் கண்டு பொருமையும் பட்டார். சிலருடைய பென்சில் பேனு முனைகளையும் இளமையில் பொருமையால் உடைத்திருக்கிருர். அவர் எழுத்து, கோணற் கீற்றெழுத்துக்களே. எவ்வளவோ முயன்றும் பண்படவே யில்லை.

அவர் மெட்ரிக்குலேஷன்பரீட்சைக்குப் போக முடியாமல் தடைபட்டே படிப்பை முடித்துக் கொண்டார். கதிரைவேற்பிள்ளை, திரு. வி. க.வின் முதல் தமிழாசிரியர். கதிரைவேற்பிள்ளை மீது இராமலிங்க சுவாமிகள் சார்பில் ஜார்ஜ் டவுன் மாஜிஸ்டிரேட் மன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அதில் திரு. வி. க. சான்றும்விரும்பப்பட்டது. சென்ருர் — சான்றும் பகன்ருர், விளைவு? இரண்டு அரை நாள் தேர்வுப் பரீட்சைகளைக் கோட்டை விட்டார். மெட்ரிகுலேஷன் தேர்ச்சிப் பெருமலேயே படிப்புக்கு முற்றுப்புள்ளி இட்டார். ஒரே வகுப்பில் இரண்டு ஆண்டு படிப்பதைக் காட்டிலும் தூக்குப் போட்டுச்சாகலாம் என்று முடித்தார் படிப்பை. தொடர்ந்து "புக் கீப்பிங்" பயின்று பரீட்சையில் தேறினர். ஸ்பென்சர் கம்பெனியில் வேலைக் கமர்ந்தார்.

ஜெர்மனியில் திருக்குறள் போதிக்க அழைப்பு வந்தது. அது மறு பிறப்பில் ! என மொழிந்து ஏற்காது விடுத்தார். விவரம் "நவசக்தி"யில் திரு. வி. க., திருக்குறள் விரிவுரைகளைக் கூறுகூருக வெளியிட்டு வந்தார். அவை சென்னையில் வதிந்த தமிழ் ஞானமுள்ள, ஒரு ஜெர்மானியர் டாக்டர் பெய்தான் என்பாரின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவா உடனே, திரு. வி. க.வுக்கு, 'பெர்லின் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் போதகாசிரியராக அமர்ந்து தொண்டாற்ற இசைய வேண்டும். ஆறே திங்களில் ஜெர்மன் மொழியை எளிதில் கற்றுக் கொள்ள முடியும். திருக்குறள் ஜெர்மனியில் போதிக்க வேண்டும்"—என்று கேட்டுக் கடிதமெழுதினர். அதற்குத்தான் திரு. வி. க. 'மறுபிறப்பில்' என்று பதிலிறுத்தி அழைப்பை மறுத்தார்.

திரு. வி. க. ஒரு சமயம் ஒரு பெரிய சோதனைக்கு ஆளானர். அது திருமணத்தைப் பற்றியது. ஒரு கூட்டத்தில் "கிருஸ்துவும் சிலுவையும்" என்னும் பொருள் பற்றி சிறப்புரை ஒன்று ஆற்றினர், அப்பேச்சில் சொக்கிய கிருஸ்துவப் பெண்மணி ஒருவள் திரு. வி. க.வை மணக்க விரும்பினள். அதற்காக அவரை கிருஸ்துவ மதத்திற்கு மாறும்படியும் வற்புறுத்தினள்! மதமாற்றநோக்கம் திரு. வி. க. விற்கு இல்லாது போகவே திருமணப் பேச்சு முறிந்தது. அதுவே அவரது பெரிய சோதனை!

திரு. வி. க. 13—9—1912-ல் கமலாம்பிகை என்னும் அம்மையாரை மணந்து ஆறு ஆண்டு காலமே இல்வா[illegible]றை யடைந்து 18—9—1918-ல் தமது மனைவியரை இழந்தார், எஞ்சிய வாழ்க்கையில் மறு மணத்தை வெறுத்து ஒதுக்கினர்.

அவரது இல்வாழ்க்கை இன்பப் பரிசில்களாக இரு குழவிகளைப் பெற்ருர், ஒன்று ஆண். மற்ருென்று பெண். ஆண் குழவி பிறந்த வாரத்திலேயே மறைந்தது. பெண் குழவி திலகவதி என்னும் பெயரைப் பூண்டு ஓராண்டே தவழ்ந்து மறைந்தது. பிள்ளைப்பேறு பெற்ருர். பெற்றச் செல்வங்களையும் இழந்தார். தனித்து நின்ருர்.

அவரது தமையனுரின் குழந்தைளும், பிறகு பேரக்குழந்தைகளும் அவரது தனிமையைக் களைந்தன. பேரக் குழந்தைகளின் திட்டு அமிழ்தம், அவைகளின் அடி ஆனந்தம்; உதை பேரானந்தம்; குழந்தைகளைத் திட்டச் சொல்வார், அடிக்கச் சொல்வார். உதைக்கச் சொல்வார். குழந்தைகளும் அவரை "போடா பெச்சி தாத்தா!' 'வாடா பெச்சி தாத்தா' "மொட்டை மண்டை!" என்றெல்லாம் அழைக்குமாம். அவையெல்லாம் அவருக்கு அமிழ்தம், ஆனந்தம், பேரானந்தம். அவரது உள்ளம் குழந்தை உள்ளம்! பெண் உள்ளம்!

நகர ஓட்டல் படியை அவர் அடிதடவியது ஐந்தோ அல்லது ஆறு முறைபேதான். அவருக்குச் சுருட்டு, சிகரெட், பீடி முதலிய வற்றின் மீது கடும் வெறுப்பு. தாம்பூலம் நலமெனக் கண்டாலும் அதைப் போடும் வழக்கத்தையுங் கொள்ளவில்லை.

அவர், உணவில் புளி, மிளகாய் சேர்க்கை கூடாது என்று வெறுப்பவர், "காட்டுக்குப் புலி [illegible]ளி"—என்னும் பழமொழியை அடிக்கடி [illegible]காட்டு வார்.

அவர் பிறவியிலேயே "கிட்டப் பார்வை" யுடைய கண்களைப் பெற்ருர். 1919ல்தான் கண்ணுடி அணியலானுர், அது குறித்து அவர் "யான் மூக்கிளேடு நேத்திரம் உடையவனுனேன்" — என்பார்.

அவரது முதுமையில் இன்னும் வழுக்கை உறவில்லையே! வழுக்கை காண மனம் விழைகிறதே! காரணம் என்னே அறியக் காணேனே!—என்றெல்லாம் ஏங்கினர்.

அறுபது வயதைக் கடந்தும் அவரது பற்கள் தளரவேயில்லை; உரமாகவே இருந்தன. அவருக்கு நல்ல பல்லமைப்பு வாய்ந்தது.

உறக்கம் அவருக்குச் சரிவர வாய்ப்பதில்லை. அவர் கொண்டது "அறிதுயிலே"—மெய் மறந்த தூக்கமன்று. அதனல் உடல் நலங்குன்றினரில்லை.

மலசலம் அடக்கல் அவரது குறைபாடு. அவர் பள்ளி மாணுக்கரா யிருந்தபோதும், கம்பெனியில் வேலை பார்த்தபோதும் அவ்வந் நிலையங்களிலுள்ள விடுதிகளில் அவர் மூத்திரம் பெய்ததே இல்லை. தோட்டத்தையோ வீட்டையோ கண்டால்தான் அந்தப் "பாரம்" ஒழியும். மாநாடுகள் பலவற்றிலும் பற்பலவகை வேதனை பட்டிருக்கிருர்.

அவரது தாயார் சின்னம்மாள் தமது 90-வது வயதில் ஆவி சேரும் வரை, தம் மகன் (திரு. வி. க.) 56-ஆம் வயது அடையும் வரை, எண்ணெய் தேய்த்து நீராட்டி அன்பு கொண்டாடினர். தாம் இறப்பதற்கு இரண்டு நாள் முன்னரும் மகனுக்கு எண்ணெய் தேய்த்துத் தலைக்கு வார்த்தே மறைந்தார். அப்புனித அன்பை, தாய் அன்பை, திரு. வி. க. தமது மறைவு நாள் வரை மறந்தாரில்லை.

சென்னையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோது நீலன் என்னும் வெள்ளையன் உருவச் சிலை மவுண்ட் ரோடினின்றும் பொருட்[illegible]லைக்கு அகற்றப்பட்டது. காட்சி[illegible] அவ்வேளை [illegible]ங்டன் உருவச் சிலையும் அகற்றப்படல[illegible]வேண்டுமென்று கூட்டங்கள் வாயிலா[illegible]வும், நவசக்தி வாயிலாகவும் கிளர்ச்சி செய்தார். (அக்கிளர்ச்சி இன்னும் வெற்றி பெருமல் இருப்பது தமிழ் நாட்டின் குறையே தான்!)

காலஞ் சென்ற "கல்கி" ரா. கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கும், திரு. வி. க. தமது "நவசக்தி"யில் இடமளித்தார். அவர் 'அகஸ்தியர்'—"மாறுதல் வேண்டாதான்" போன்ற புனைப் பெயர்கள் பூண்டு கட்டுரைகள் தீட்டியிருக்கிருர்.

ஒன்றரை ஆண்டு "தேசபக்தன்" ஆசிரியராகவும். இருபதாண்டு 'நவசக்தி' நடத்தியவராகவும் திகழ்ந்து மறைந்தார் திரு. வி. க.

கடைசியில் "நவசக்தி"யை இராதமணி அம்மையார். சக்திதாஸ் சுப்ரமணியம் ஆகியவர்களிடம் ஒப்படைத்தார். அது அவரது தமையனுர் மகன் இறந்தமையின் எதிரொலியே யாகும்.

இத்தகு சிறப்புகள் வய்ந்த தன்ருே திரு. வி. க. வாழ்க்கை!

வந்தைவேள்

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1

மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிரோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிருேம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127 பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்




கண்கவரும் முகப்பு ! **கச்சிதமான அமைப்பு !**

பொங்கற் புதுநாளன்று திராவிடன் அளிக்கும் மகத்தான விருந்து

திராவிடன் பொங்கல்மலர்

- அறிஞர் அண்ணு அவர்கள் தரும் அரசியல் நிகழ்ச்சிகள்.
- திராவிடத்தின் சிறந்த எழுத்தாளர்கள் அளிக்கும் கதை - கட்டுரைகள்.
- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் அவர்தம் பரம்பரையினரும் புனைகின்ற கவிதைக் குவியல்.
- ஓவிய நிபுணர் பாலு சகோதரர்கள் தீட்டும் எழில்மிகு சித்திரம்.

நூறு பக்கங்கள்



எல்லா சிறப்பும் உண்டு **விலை ரூபாய் ஒன்று.**

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16/99, அப்பன் கோயில் தெரு, சென்னை-1.